பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 20 சனிக்கிழமை (04.03.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 075

## ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை வெளியானது

# நல்லிணக்கம், பொறுப்புக்கூறல்

# மந்தகதியில் முன்னெடுப்பு!



## இலங்கையை தொடர்ந்து கண்காணிக்க பரிந்துரை

(ஜெனிவா)

இலங்கையின் மனித உரிமைகள் நிலையை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்றும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தால் முழு அளவிலான பணியகம் ஒன்றை அமைப்பதற்கும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பரிந்துரைத்துள்ளார்.

(23-ம் பக்கம்...)

## புதுக்குடியிருப்பில் ஒரு தொகுதி காணிகள் இன்று விடுவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பில் படையினர் வசம் உள்ள பொது மக்களின் காணிகளில் ஒரு பகுதி இன்று விடுவிக்கப்படும் என்று முல்லைத்தீவு அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கேப்பாப்பிலவில் மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், புதுக்குடியிருப்பு மக்கள் தமது காணிகளை விடுவிக்கக் கோரி தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையிலேயே இன்று தொடக்கம் இக்காணிகளை படிப்படியாக விடுவிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி

04ஆம் பக்கம் பார்க்க....

## டெங்குக் காய்ச்சல் இளம்பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோய் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவதற்கு சென்ற இளம் தாய் ஒருவர் நேற்று முன்தினம் யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் சிவப்பிரகாசம் வீதியை சேர்ந்த நந்தகுமார் லக்ஷி (வயது 34) என்ற 2 பிள்ளைகளின் தாயாரே மேற்படி உயிரிழந்தவரா

04ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி இன்று யாழில்



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இன்று காலை 10 மணியளவில் விமானம் மூலம் யாழ்ப்பாணம் வருகை தரும் அவர், வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் ஜனாதிபதியிடம் சொல்லுங்கள் நிகழ்ச்சி திட்டத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார். இதனை அடுத்து தெல்

23ஆம் பக்கம் பார்க்க....

## கூட்டமைப்பு வரவேற்பு!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையை வரவேற்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர்

23ஆம் பக்கம் பார்க்க....

## வேலையற்ற பட்டதாரிகள் ஜனாதிபதியுடன் இன்று சந்திப்பு



04ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி கவனத்தை ஈர்க்க போராட அனந்தி அழைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பணத்திற்கு வருகை தரவுள்ள ஜனாதிபதியின் கவனத்தை ஈர்க்கும் முகமாக மக்கள் போராட்டம் ஒன்றினை முன்னெடுக்க அனைவரும் ஒன்றிணையுமாறு வட மாகாண ஆளும் கட்சி உறுப்பினர் அனந்தி சசிதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த போராட்டம் இன்று காலை பத்து மணியளவில் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக நடைபெறவுள்ளது என அவர் அறிவித்துள்ளார்.

யாழ்.பாடி விருந்தினர் விடுதியில் நேற்று பிற்பகல் ஒருமணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

04ஆம் பக்கம் பார்க்க....

## சங்கிலி அறுக்க முயற்சி தடுத்தபோது கத்திக்குத்து

(மல்லாவி)

கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற கத்திக்குத்துக்கு இலக்காகி 56 வயதுடைய பெண் கழுத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது.

சாந்தபுரம் கிராமத்தில் இருந்து இரணைமடுகுளத்திற்கு நன்னீர் மீன் தொழில் நடவடிக்கைக்குச் சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்த போது பாதையின் இடையில் இரணைமடு இராணுவ தலைமையகத்திற்கு பின்புறமாக உள்ள காட்டுக்குள் மறைந்திருந்த ஒருவர் திடீரென குறித்த பெண் அணிந்திரு

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி, பிரதமர் பதிலளிக்கும் வரை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர் கவனயீர்ப்பு போராட்டம்!



(யாழ்ப்பாணம்)

எங்கள் உறவுகளை எங்கே என்று கேட்டு வாட்டும் வயோதிபத்திலும் இரவு பகலாக போராடும் எம்முடைய குறைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேட்பாரா? என வவுனியா மற்றும் கிளிநொச்சியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கண்ணீர் மல்க தெரிவித்துள்ளனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடை

04ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 26 - 06 - 1932

உதிர்வு 03 - 02 - 2017



அமரர்

## சுந்தரம்பிள்ளை கதிரவேலு

(முன்னாள் லொறிச் சாரதி SAFEE & V.M.S டிரான்ஸ்போட்)

03.02.2017 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த குடும்பத் தலைவர் சுந்தரம்பிள்ளை கதிரவேலு அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 05.03.2017 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.


மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம், பதாகைகள் மற்றும் பல வழிகளிலும் பிரிவுத் துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மற்றும் யாருக்கும் அழைப்பிதழ் தராமல் தவறவிடப்பட்டிருப்பின் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

துறட்டிப்பனை அம்மன் கோவில் வீதி,
வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை.

(C-7722)

இங்ஙனம்
குடும்பத்தினர்

# மழை



(கொழும்பு)

நாட்டைச் சூழ்ந்துள்ள வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக மழையுடன் கூடிய காலநிலை இன்றும் தொடரக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (11)

# வெளியீட்டு விழா

நீர்வேலி, வாய்க்காற்றரவை மூத்த விநாயகர் தேவஸ்தான ஆதீன கர்த்தா அமரர் சிவஸ்ரீ சு. ஆபதோத்தாரணக் குருக்கள் அவர்களின் ஞாபகார்த்த விழாவும் 'ஆபதோத்தாரணம்' நூல் வெளியீடும்

காலம்:
**05.03.2017 ஞாயிறு மாலை 4.00 மணி**

இடம்:
**மேற்படி ஆலய மண்டபம்**

தலைமை:
**கலாநிதி பிரம்மஸ்ரீ ம.பாலகைலாசநாதசர்மா**
**(சமஸ்கிருதத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)**

சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள், பிரம்மஸ்ரீ சு. நவநீதகிருஷ்ண சர்மா, ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள், ஸ்ரீ ஜாக்ரத் சைதன்யா சுவாமிகள், செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன், செஞ்சொற் சாகரம் கு. பால சண்முகன், சைவப்புலவர் ஏ. அனுசாந்தன் ஆகியோர் விழாவில் கலந்து சிறப்பிக்கின்றார்கள்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

வாய்க்காற்றரவைப் பிள்ளையார் கோவில்
நீர்வேலி.

(8110)

இங்ஙனம்
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் வேலாயுதர் இலகுநாதன்



எமது கல்வி வலயத்தில் கடமை புரியும் செல்வி **இ.சிவதர்சினி** அவர்களின் அன்புத் தந்தையார் **வேலாயுதர் இலகுநாதன்** அவர்கள் **02.03.2017** அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'நலன்புரிக்கழக அங்கத்தவர்கள்,
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(8111)

# முற்போக்கு தமிழ் தேசிய கட்சி வடக்கில் நடத்தும்

## மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

(Over Game / Step Up Game)

- முதல் பரிசு 30,000
- 2ம் பரிசு 20,000
- 3ம் ஆறுதல் பரிசு
- 4ம் ஆறுதல் பரிசு

5 விளையாட்டு வீரர்கள் 3 சுற்று (Over Game)
கால் இறுதி சுற்று 5, இறுதி சுற்று 5
ஒரு உதை மட்டுமே (One Shot Game)

6 விளையாட்டு வீரர்கள் 3 சுற்று (Step Up Game)
கால் இறுதி சுற்று 5, இறுதி சுற்று 5

● போட்டிக் கட்டணம் இலவசம் ● முடிவு திகதி :-10.03.2017

**அணிகள் தொடர்புகொள்ள :-**

| | |
|---|---|
| தலைமை அலுவலகம், வடக்கு மாகாணம் | :- 0213200716,717 |
| கிளின்ரன் | :- 0770393384 |
| மொறைஸ் | :- 0775427375 |
| பூலோகராஜா | :- 0770489549 |

## மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

- முதல் பரிசு 30,000
- 2ம் பரிசு 20,000
- 3ம் ஆறுதல் பரிசு
- 4ம் ஆறுதல் பரிசு

7 விளையாட்டு வீரர்கள் 6 பந்துப் பரிமாற்றம்

● போட்டிக் கட்டணம் இலவசம் ● முடிவு திகதி :-10.03.2017

**அணிகள் தொடர்புகொள்ள :-**

| | |
|---|---|
| தலைமை அலுவலகம், வடக்கு மாகாணம் | :- 0213200716,717 |
| மாதவன் | :- 0770781437 |
| முல்லைத்தீவு (திவாகர்) | :- 0763884038 |
| கிளிநொச்சி (பூலோகராஜா) | :- 0770489549 |



(C-7718)

## நடுவரின் தீர்ப்பே இறுதியானது

தகவல் :- முற்போக்கு தமிழ் தேசிய கட்சி விளையாட்டுப் பிரிவு
இல.46, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

# ஆபத்தை சந்திக்கக்கூடியோருக்கு விசேட அதிரடிப்படை பாதுகாப்பு!

(கொழும்பு)

ஆபத்தைச் சந்திக்கக்கூடிய அதிக வாய்ப்புள்ள நபர்களை சிறைச்சாலை பேருந்துகளில் அழைத்துச் செல்லும் போது பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வது குறித்துப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் பூஜித ஜயசுந்தர, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் எச்.எம்.என்.சி. தனசிங்க ஆகியோர் பங்குகொண்ட கூட்டமொன்றின் போதே, இந்த விடயம் கருத்திற் கொள்ளப்பட்டது.

புலனாய்வு அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் ஆபத்து ஆராய்ச்சிக்குப் பிறகு, ஆபத்தைச் சந்திக்கக்கூடிய சிறைக்கைதிகள், அடையாளங்காணப்படுவர் என பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

"சிறைக்கைதிகளுக்கான பாதுகாப்பை அதிகப்படுத்துவதற்கு, சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கு உதவியை வழங்குவது குறித்து, இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

சிறைக்கைதிகளைக் கொண்டு செல்லும் சிறைச்சாலை பேருந்துகளுக்குப் பாதுகாப்பு வழங்குவது குறித்த, கட்டமைப்பு ரீதியான திட்டமொன்றைக் கொண்டுவர, நாங்கள் திட்டமிடுகிறோம். இந்தத் தேவைக்காக, அநேகமாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் பயன்படுத்தப்படுவர்" என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, . நாட்டில் உள்ள அனைத்து நீதிமன்றங்களுக்கும் மேலதிக விசேட பொலிஸ் பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக, பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் உள்ள அனைத்து நீதிமன்றங்களுக்கும் மேலதிக விசேட பொலிஸ் பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக, பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (இ-7)

## நீதிமன்றில் ஆயுதங்களை வைத்தவர் கல்கிஸை பொலிஸில் சரணடைந்தார்

கல்கிஸை நீதவான் நீதிமன்ற அறைக்குள், சுடுவதற்கு தயார் நிலையில் ஆயுதங்களை வைத்ததாக கூறப்படும், ரொசான் இந்திக்க டி சில்வா என்பவர், கல்கிஸை பொலிஸில் நேற்றுக்காலை சரணடைந்துள்ளார்.

சுடுவதற்கு தயார் நிலையிலிருந்த கைத்துப்பாக்கியும் ரிவோல்வரும் ஆறு ரவைகளும் கல்கிஸை நீதவான் நீதிமன்ற வளாகத்திலிருந்து பொலிஸாரினால் கடந்த முதலாம் திகதி மீட்கப்பட்டன. பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது, நீதிமன்ற வளாகத்தில், சந்தேகத்துக்கு இடமான முறையில் பை ஒன்று இருந்துள்ளது. அதனை சோதனைக்கு உட்படுத்திய போதே, இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. சீன தயாரிப்பான இந்த ஆயுதங்கள், பிரயோகம் செய்வதற்கு தயாரான நிலையிலேயே இருந்தன என்றும் நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்தே, தாக்குதல்களை மேற்கொள்வதற்கு இவை எடுத்துவரப்பட்டிருக்கலாம் என்றும் கல்கிஸை பொலிஸார் தெரிவித்தனர். களுத்துறை சிறைச்சாலையிலிருந்து கைதிகள் ஏற்றிச்சென்ற பேருந்தின் மீது, கடந்த 27ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகங்களை அடுத்து, நீதிமன்றங்களின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே விசேட பொலிஸ் குழுவை பயன்படுத்தி, கல்கிஸை நீதவான் நீதிமன்றம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன் போது, ஆயுதங்கள் மீட்கப்பட்டமையால், நீதிமன்ற நடவடிக்கைகள் யாவும் முழுமையாக கைவிடப்பட்டன. நீதிமன்ற வளாகத்திலிருந்த சகலரும் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அதற்காக பொலிஸ் மோப்ப நாய்களும் பயன்படுத்தப்பட்டன. (இ-7)

## இந்த அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தை அடக்க முடியாது

(கொழும்பு)

நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து வரும் அரசாங்கம் விமல் வீரவன்ச போன்ற அரசியல் தலைவர்களை சிறை வைத்து தனது அதிகாரத்தை பாதுகாக்க நினைக்குமாயின் அது தவறு என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார்.

விமலை உடனடியாக விடுதலை செய் என்ற தொனிப்பொருளில் இரத்தினபுரி நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கம் நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து, வீழ்ந்துவிட போகும் அதிகாரத்தை தற்காத்து கொள்ள கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர்களை வேட்டையாடி வருகிறது.

நாட்டின் ஐக்கியத்திற்காகவும் அநீதிக்கு எதிராகவும் குரல் கொடுக்கும் அரசியல் தலைவர்களை அரசாங்கம் வேட்டையாடி வருகிறது.

இதற்கு எதிராக நாங்கள் வீதியில் இறங்கியுள்ளோம். வீரவன்ச என்பவர் நாட்டுக்காக முன்னின்று போரிட்ட தலைவர். இவர்களை சிறையில் அடைத்து அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தை அடக்க முடியாது.

உடனடியாக விமல் வீரவன்சவை விடுவிக்குமாறு கோருகிறோம். கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர்களை அடக்கி தமது இயலாமையை மூடி மறைக்க முடியாது என்பதை மைத்திரி - ரணில் அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் ரஞ்சித் சொய்சா தெரிவித்தார். (இ-7)

## குற்றத்தை ஒப்புக்கொண்ட இந்தியருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை

மிரிஹான தடுப்பு முகாமில் இருந்து தப்பிச்சென்ற இந்தியப் பிரஜை, தனக்கெதிரான குற்றச்சாட்டுகளை ஒப்புக் கொண்டதையடுத்து. அவருக்கு 5 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத்தண்டனையும் 100,000 ரூபாய் அபராதமும் விதித்து, கொழும்பு பிரதான நீதவான் லால் ரணசிங்க பண்டார, நேற்று முன்தினம் உத்தரவிட்டார். இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சிறுநீரக வியாபாரத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டு, மிரிஹான தடுப்பு முகாமில் இருந்தபோது, தப்பிச் சென்ற இந்தியர்கள் எட்டுப் பேரில் ஐந்து பேர், மீண்டும் கைது செய்யப்பட்டனர்.


மிரிஹான தடுப்பு முகாமிலிருந்து தப்பிச் சென்றமை, குடிவரவுச் சட்டத்தை மீறி, செல்லுபடியான கடவுச்சீட்டு இன்றி இலங்கையில் தங்கியிருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ், கொழும்பு குற்றப் பிரிவினர் வழக்குப் பதிவு செய்ததையடுத்து, அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்தியப் பிரஜையான இஸ்தியன் கான், தனக்கெதிரான இரு குற்றச்சாட்டுகளையும், நேற்று முன்தினம் ஒப்புக் கொண்டார். ராகவேந்திரா உபாரா, தெய்பா விக்கிராஜா ஆகியோரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதுடன், அவர்களுக்கும் மேற்குறித்த தண்டனை வழங்கப்பட்டது. யடலப்பாரி வமிஸ் கிருஷ்ணா, டோகிபதி ஶ்ரீநிவாஸ் ஆகிய இருவரும், முறையே 8ஆம் 16ஆம் திகதிகளில் குற்றங்களை ஒப்புக் கொள்வதாக அறிவித்துள்ளதையடுத்து. அவர்கள் அன்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (இ-7)

## தெற்கு அதிவேகப் பாதையை தனியார்மயப்படுத்தத் திட்டம்

தெற்கு அதிவேக வீதி உள்ளிட்ட அதிவேக வீதிகளை நிர்வகிப்பதற்காக தனியான நிதி நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தி அதனை தனியார்மயப்படுத்தும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்தார்.

நேற்று அபயராம விகாரையில் இடம்பெற்ற தேசிய வளங்களை பாதுகாப்போம் என்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

## அம்பாந்தோட்டை நோக்கி விரையும் அமெரிக்க கடற்படை அதிவேக கப்பல்



அமெரிக்க கடற்படையின் அதிவேகப் போக்குவரத்துக் கப்பலான 'யுஎஸ்என்எஸ் போல் ரிவர்' (USNS Fall River) அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை நோக்கிப் பயணத்தை ஆரம்பித்திருக்கிறது. சிங்கப்பூர் துறைமுகத்தில் இருந்து இலங்கை நோக்கி நேற்று முன்தினம் இந்தக் கப்பல் புறப்பட்டுள்ளது.

தெற்காசியாவில் முதலாவது மனிதாபிமான மற்றும் அனர்த்த, நிவாரண முன்னாயத்த ஒத்திகையை மேற்கொள்வதற்காக, அமெரிக்க கடற்படையின் இந்த அதிவேக போக்குவரத்துக் கப்பல் அம்பாந்தோட்டை நோக்கிப் பயணத்தை ஆரம்பித்துள்ளது.

அவுஸ்திரேலியா, ஜப்பான், தென்கொரியா, பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 200 இராணுவ மற்றும் சிவில் அதிகாரிகள் இந்த ஒத்திகையில் பங்கேற்கவுள்ளனர்.

இந்த ஒத்திகையில் யுஎஸ்என்எஸ் போல் ரிவர் உதவிக் கப்பலாகப் பங்கேற்கவுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 80 வீத உரிமையை சீனா குத்தகைக்குப் பெற்றுக் கொள்ளத் திட்டமிட்டுள்ள நிலையில் அமெரிக்க கடற்படைக் கப்பல் இங்கு ஒத்திகையை மேற்கொள்ளவிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## டெங்குக் காய்ச்சல் ...

வார்.

குறித்த பெண்ணுக்கு கடந்த 4 நாட்களாக காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம் இருந்த காரணத்தால் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இருப்பினும் நேற்றைய தினம் கடுமையான காய்ச்சல் காரணமாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறுவதற்கு வந்த இவர், வெளிநோயாளர் பிரிவில் வைத்தியரை சந்திக்க காத்திருந்த போதே உயிரிழந்துள்ளார். பிரேத பரிசோதனையின் போது மேற்படி பெண் டெங்கு நோய் தாக்கத்தால் உயிரிழந்திருந்தமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த இறப்பின் மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடங்களை விட இந்தவருடம் டெங்கு நோய் தாக்கம் அதிகளவில் காணப்படுவதாகவும் பொதுமக்களை அவதானத்துடன் செயற்படுமாறும் சுகாதாரத்துறையினர் எச்சரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

## புதுக்குடியிருப்பில் ...

யின் தலைமையில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட முல்லைத் தீவு அரசாங்க அதிபர் இதனைத் தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

படையினர் வசமிருந்த முல்லைத்தீவு மாவட்ட கேப்பாப்பிலவு நிலக் குடியிருப்பு காணிகள் முழுவதுமாக மக்களிடம் மீள கையளிக்கப்பட்டுள்ளது. இதில் 42 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டதுடன் இதனை விமானப்படையினரே இதுவரை காலமும் தம்வசம் வைத்திருந்தனர். புதுக்குடியிருப்பில் தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி மக்கள் போராட்டங்களைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர். எனினும் அரசாங்கம் இக்காணிகளைப் படிப்படியாக விடுவிக்கத் தீர்மானித்துள்ளது.

மூன்று கட்டங்களாக இந்த காணி விடுவிப்பு இடம்பெறவுள்ளதுடன் இன்று 4ம் திகதி முதற்கட்ட காணி விடுவிப்பு இடம்பெறவுள்ளது. அடுத்து 3 மாத காலத்திலும் அதற்கடுத்து 6 மாதகாலத்திலும் இந்த காணி விடுவிப்பு இடம்பெறும். பெரும்பாலும் அம்மக்கள் இன்று தமது போராட்டத்தைக் கைவிடுவர் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். (11)

## வேலையற்ற பட்டதாரிகள் ...

யாழ்.மாவட்ட செயலகத்திற்கு முன்பாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளை இன்றைய தினம் யாழ்ப்பாணம் வருகை தரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்திக்கவுள்ளார். இந்த சந்திப்பு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. அரச வேலை வாய்ப்பை கோரி நேற்றைய தினம் ஐந்தாவது நாளாகவும் பட்டதாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரவு பகலாக முன்னெடுக்கப்பட்டு வரும் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வேலையற்ற பட்டதாரிகளை நேற்றைய தினம் இரவு சந்தித்த வடக்கு மாகாண ஆளுநர் ரெஜிநோல்ட் கூரே, நாளைய தினம் (இன்று) ஜனாதிபதியிடம் சொல்லுங்கள் என்ற நிகழ்ச்சி திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்கென யாழ்ப்பாணம் வரவிருக்கும் ஜனாதிபதியை,

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகள் சார்பாக பிரதிநிதிகள் சிலரினை ஜனாதிபதியுடன் சந்திக்க வைப்பதற்கான ஏற்பாடு செய்வதாக உறுதியளித்திருந்தார். எனினும் தம்முடைய போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ள பட்டதாரிகள், நாளையும் (இன்றும்) தமது போராட்டம் தொடரும் எனவும் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியுடனான சந்திப்பில் உரிய தீர்வு எட்டப்பட்டால் மாத்திரமே போராட்டத்தை கைவிடுவது தொடர்பில் ஆராய்வோம் எனவும் பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர். இதேவேளை இரவு பகலாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்தில் வீதியின் கரைகளில் உணவு சமைத்து உண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## காணாமல் ஆக்கப்பட்டோரின் ...

பெற்றது என்பது தொடர்பில் பொறுப்புக் கூறலை வலியுறுத்தி,

கிளிநொச்சியில் பன்னிரண்டு நாளாகவும், வவுனியாவில் எட்டாவது நாளாகவும் காணமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இந்த நிலையில் ஜனாதிபதியிடம் சொல்லுங்கள் என்ற குறைகேள் அரங்கினை திறந்து வைப்பதற்கென இன்றைய தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

இந்த நிலையிலேயே காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதியிடம் சொல்லுங்கள் என்ற குறைகேள் அரங்கினை திறந்து வைப்பதற்கு யாழ்ப்பாணம் வருகின்ற ஜனாதிபதிக்கு, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது? என்பதனை கோரி தொடர்ச்சியா[illegible] இரவிலும் பகலிலும் போராடி வரும் எமது குறைகள் தெரியவில்லையா?

அல்லது நாங்கள் இந்த நாட்டின் பிரஜைகள் இல்லையா? எமது கண்ணீர் ஜனாதிபதிக்கு இந்த நாட்டு மக்களுடைய குறைகளில் ஒன்றாக தெரியவில்லையா? எமது உறவுகளுக்கு என்ன நடைபெற்றது என்று இந்த அரசு பொறுப்புக்கூறலை வழங்கும் வரையில் நாம் எமது போராட்டத்தை நிறுத்த போவதில்லை. பல வாக்குறுதிகளை நம்பி பலமுறை ஏமாந்துவிட்டோம்.

இனியும் வாக்குறுதிகளை நம்பி எம்மால் ஏமாற முடியாது. எத்தனையோ வருட காலமாக எமது உறவுகளை காணாது கண்ணீர் வடித்து செத்து கொண்டுள்ளோம். இந்த போராட்டத்தில் இருந்து ஒருபோதும் பின்வாங்க போவதில்லை. ஜனாதிபதி அல்லது பிரதமர் எமக்கான பதிலை வழங்கும் வரையில் இ[illegible] போராட்டம் தொடரும் என அவர்கள் அறிவித்துள்ளனர். (செ-4)

## ஜனாதிபதி கவனத்தை ...

அவர் மேலும் தெரிவிக்கையில், இராணுவத்தை உற்சாகபடுத்தவே ஜனாதிபதி யாழ்ப்பாணம் வரவுள்ளார். ஐநா கூடியுள்ள இந்த நேரத்தில் சரணடைந்த காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பொறுப்பு கூறல் இல்லை, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை இல்லை பெரிதும் எதிர்பார்க்கபட்ட வடக்கு கிழக்கில் காணிகள் விடுவிக்கப்படவில்லை. ஐநா சபைக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை.

இந்த நிலையில் ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்கு வரும் நிகழ்வு தமிழ் மக்களுக்கு எந்தவொரு நன்மை பயக்க கூடியதாக அமைய போவதில்லை. எனவே நாளை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஒன்றிணைந்து காலை 10 மணிக்கு வடமாகாண ஆளுனர் அலுவலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுக்க உள்ளோம். இது மக்கள் போராட்டமாக இருக்க வேண்டும் எனவே எல்லோருமே ஒன்றிணைந்து போராட முன் வரவேண்டும்.

எனவே இந்த கவனயீர்ப்பு போராட்டம் மிக பெரிய மக்கள் போராட்டமாக வெடிக்க வேண்டும். தமிழ் தரப்பு தொடர்ந்தும் ஏமாற்றங்களுடன் வாழ்ந்து கொண்டு இருக்க முடியாது. எனவே அந்த போராட்டத்தில் தனியே பாதிக்கபபட்டவர்கள் மாத்திரமில்லாது மாணவர்கள், பொதுமக்கள் என அனைவரும் ஒன்றிணைந்து போராட முன் வரவேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (செ-4)

## Jaffna Medical Association Annual General Meeting - 2017

### NOTICE OF MEETING

Notice is hereby given to that the **Annual General Meeting (AGM)** of the Jaffna Medical Association will be held on **Thursday, 06th April 2017 at 2.00 p.m at the conference Hall of Teaching Hospital, Jaffna** for following purpose;

To receive and consider the Statement of Accounts for the year ended 31st December 2016 and the report of the Auditors thereon.

By order of the Committee of Management,

**Hon.Secretary**
**03rd March 2017** (8109)

# மரண அறிவித்தல்

மலர்வு 06 ☼ 10 ☼ 1933



உதிர்வு 01 ☼ 03 ☼ 2017

# திருமதி முத்துலிங்கம் பகவதி

4 ஆம் வட்டாரம் வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துலிங்கம் பகவதி அவர்கள் 2017.03.01 அன்று இறைபதம் அடைந்துள்ளார். அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை காசுபேத்தியின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான நடேசு, மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற முத்துலிங்கத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, மற்றும் விமலேந்திரன் (இந்தியா), பாலேந்திரன் (ஜேர்மன்), குலேந்திரன் (ஜேர்மன்), கணேஸ்வரி (இந்தியா) கேதீஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அருமைத் தாயாரும் காலஞ்சென்ற திருச்செல்வம், காலஞ்சென்ற இராஜரட்ணம் கணேசலிங்கம் (யாழ்ப்பாணம்) இராஜேஸ்வரி (இந்தியா) பாக்கியலட்சுமி (ஜேர்மன்), கலா (ஜேர்மன்) தமிழ்ச்செல்வன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமியாரும்.

புவனேந்திரகுமாரி (சுவிஸ்), செல்வகுமாரி (கொழும்பு), சந்துரு (லண்டன்), கௌதம் (இந்தியா), சௌபா (கனடா), ராஷ்மி (இந்தியா), ஜென்சி, ஜெனுசன், ஜெனீபன், ஜெனார்த்தன் (கொழும்பு), சுவேதன், பானுஜன் (ஜேர்மன்), சியான், கௌசி, ஸ்நேகா (ஜேர்மன்), சுஜீபன், கௌசிகன், கௌசல் (இந்தியா), சைனுகா (கனடா), சியானுகா (கனடா), சுவஸ்திகா (கொழும்பு) ஆகியோரின் அருமைப்பேத்தியாரும் திஷான், திவ்யன், திவிசன் (சுவிஸ்), கிஷாந்த், டனுஷாந்த், ரஷ்மிகா (கொழும்பு), ஆயுஷி (கனடா) ஆகியோரின் ஆருயிர்ப் பூட்டியுமாவார்.

**அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05.03.2017 அன்று சென்னையில் உள்ள இல்லத்தில் நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.**

(C-7719)

**தகவல்:- சி. தமிழ்ச்செல்வன் (கொழும்பு-15)**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

**T:P 077 653 1099**
**0091 988 495 8156**

# தச்சுவேலையில் ஆர்வமுள்ளவர்களிடமிருந்து மரக்கூட்டுத்தாபனம் விண்ணப்பம் கோரல்

(மல்லாவி )

ஜனாதிபதியின் விசேட பணிப்புரைக்கமைய அரச மரக்கூட்டுத்தாபனம் பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 20 - 35 வயதுக்குட்பட்ட இளைஞர்களில் தச்சு வேலையில் ஆர்வம் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக அரசாங்க மரக்கூட்டுத் தாபனத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய பிரதேச முகாமையாளர் சுப்பிரமணியம் - ஸ்ரீஸ் கந்தராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இப்பயிற்சி நெறி 10 நாட்கள் இலவசமாக நடைபெறவுள்ளதுடன் பயிற்சிகள் கல்டுமுல்லை, இரத்மலானை, கொழும்பு என்ற இடத்தில் உள்ள அரசாங்க மரக் கூட்டுத் தாபனத்தின் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன், பயிற்சிக் காலத்தின் போது உணவு, தங்குமிடம் கட்டணமின்றி வழங்கப்படுவதுடன், பயிற்சிக் காலத்தின் போது நாள் ஒன்றுக்கு 500 ரூபா உதவித் தொகையும் வழங்கப் படவுள்ளது.

பயிற்சி நிறைவில் அரச சான்றிதழ் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை தங்கள்பகுதி பிரதேச செயலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் அல்லது ஒட்டுசுட்டான், கிளிநொச்சி, நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள அரச மரக்கூட்டுத் தாபனத்தின் கிளை நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, பிரதேச முகாமையாளர், அரசாங்க மரக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள 021 222 0278 என்ற தொலை பேசி ஊடாக தொடர்பு கொண்டு தகவல்களை பெற்றுக் கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-15)




தியாகி அறக்கொடை நிறுவனத்தால் நிறுவனத்தின் ஸ்தாபகர் திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களால் தியாகி அறக்கொடை மாதாந்த உதவி பெறும் பயனாளிகளுக்கு இரண்டு இலட்சம் பெறுமதியான கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் 02.03.2017 வியாழக்கிழமை நடைபெற்றது. மாநகர சபைக்குட்பட்ட பெண் தலைமை தாங்கும் 72 குடும்பங்களுக்கான கொடுப்பனவு தலா 2000 ரூபாவும் வறுமை நிலைக்கு உட்பட்ட 75 குடும்பங்களைச் சேர்ந்த முதியவர்களுக்கு 1000 ரூபா பெறுமதியான உணவுப் பொதியும் நலிவுற்ற 55 குடும்பங்களைச் சேர்ந்த தாய்சேய் நலனுக்கான 1000 ரூபா பெறுமதியான சத்துணவுப் பொருட்களும் நலிவுற்ற குடும்பங்களுக்கான மாதாந்த கொடுப்பனவும் 15 மாணவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

## இராசி பலன்

04.03.2017
(மாசி 20, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு
சஷ்டி முற்பகல் 10.50 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 12.41 மணிவரை
சுபநேரம் 3.26-4.56 மணிவரை
இராகுகாலம் 9.26-10.56 மணிவரை
கார்த்திகை விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் | செவ் சந் | | |
| சூரி கேது புத | கிரகநிலை சந்திராஷ்டமம் சித்திரை, சுவாதி காலை7.22 மணிக்கு இடப-சந் | | |
| | | | ராகு |
| | சனி | குரு | |

**மேடம்** காலைப்பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**இடபம்** பெருமைகள் வந்து சேர கந்தனை வழிபட வேண்டிய நாள், உடல்நலன் சீராக உணவில் கட்டுப்பாடு தேவை, பெரியோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்** எடுத்த செயலை முடிக்க ஒருமுறைக்கு பலமுறை அலையும் சூழ்நிலை உருவாகும், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**கடகம்** பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்.

**சிம்மம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் சந்தோசமான சம்பவங்கள் நடைபெறலாம், உறவினர்கள், நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கலாம்.

**கன்னி** மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுணங்கிய காரியங்கள் கைகூடும்.

**துலாம்** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, பணவிரயங்கள் கூடும்.

**விருச்சிகம்** உடன் பிறப்புக்கள் உதவிக் கரம் நீட்டுவர், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**தனுசு** கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், வருங்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, செல்வாக்கு மேலோங்கும் நாள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**மீனம்** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், பகைவிலகி பாசம் கூடும் நாள், தொழிலில் எதிர்பார்த்த திருப்பங்கள் ஏற்படலாம்.

# அம்பிகைபாகனின் திருவுருவப்படம் திறப்பு




(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றி ஓய்வு பெற்ற வைத்தியர் சங்கரப்பிள்ளை அம்பிகைபாகன் (கடவுள்) அவர்களின் திருவுருவப் படம் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றது.

ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர் வைரவநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருவுருவப் படத்தினை மருத்துவர் அம்பிகைபாகனின் நண்பர் சு.பூபாலசிங்கம் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந் நிகழ்வில் வைத்திய சாலை மருத்துவர்கள் சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சிற்றம்பலம் துரைராசா மற்றும் வடமாகாண மனிதவுரிமை அமைப்பின் பணிப்பாளர் வைத்திலிங்கம் சிவராசா, ஓய்வுபெற்ற மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் நலன்புரி சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் மருத்துவர் நினைவாக மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (இ-89)

# ஆங்கில எழுத்துக்கூட்டல்; விண்ணப்ப காலம் நீடிப்பு


(யாழ்ப்பாணம்)


ஆங்கில எழுத்துக்கூட்டல் (Spelling Bee Competition) போட்டிக்கான விண்ணப்பிக்கும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

காலையடி மறுமலர்ச்சி மன்றத்தினால் வடமாகாண அளவில் நடத்தப்படவுள்ள ஆங்கில எழுத்துக்கூட்டல் (Spelling Bee Sri Lanka - 2017) போட்டிக்கு மாணவர்கள் விண்ணப்பிப்பதற்கான இறுதி நாள் மார்ச் மாதம் 03 ஆம் திகதி (03.03.2017) என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், பல்வேறு தரப்பினரின் வேண்டுகோளுக்கு இணங்க மார்ச் மாதம் 10 ஆம் திகதி (10.03.2017) வரை நீடிக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டியின் அரையிறுதி வரையான போட்டிகள் யாவும் மாணவர்கள் வசிக்கும் குறித்த மாவட்டங்களிலேயே இடம்பெறும். இப் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களையும், சொற்தொகுதிகளையும் marumalarchy.org என்ற மறுமலர்ச்சி மன்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக தகவல்களுக்கு 071 847 3926, 077 002 7621 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-9)





பருத்தித்தறை ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் ரீ.முகுந்தன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் உரையாற்றுவதையும் வைத்திய கலாநிதி திருமதி நந்தினி உதயகுமார் வெற்றிபெற்ற மாணவனுக்கு வெற்றிக்கேடயம் வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

# கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக யாழில் அரிசி விற்பனை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அரிசி வகைகளை கட்டுப்பாட்டுவிலைக்கு விற்பனை செய்யாத வர்த்தகர்கள் தொடர்பான முறைப்பாடுகளை யாழ். பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையிடம் அறிவிக்குமாறு யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் இணைப்பதிகாரி த.வசந்தசேகரம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பல வர்த்தக நிலையங்களில் அத்தியாவசியப் பொருட்கள் கட்டுப்பாட்டு விலைக்கு விற்கப்படுவதில்லை என்ற முறைப்பாடுகள் அதிகரித்த வண்ணமுள்ளன. அதிலும் அரிசி வகைகள் தான் கட்டுப் பாட்டு விலைக்கு அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றது என அதிக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக அரிசி வகைகளை பொதி செய்து விநியோகிக்கும் உற்பத்தியாளர்கள் அப்பொதிகளில் விலையை காட்சிப்படுத்துவதில்லை. இதன் காரணமாகவே விற்பனையாளர்கள் அதிக விலைக்கு அரிசி வகைகளை விற்பனை செய்யக்கூடிய சந்தர்ப்பம் அமைந்துள்ளது. அரசி வகைகளை பொதி செய்து விநியோகிப்பவர்கள் அப்பொதிகளில் கட்டாயமாக விலை விபரம் காட்சிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு காட்சிப்படுத்தப்பட்ட பொதிகளையே வர்த்தகர்கள் கொள்வனவு செய்து விற்பனை செய்ய வேண்டும்.

மேலும் விற்பனை நிலையங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தல் அவசியமாகும். அத்துடன் விற்பனை விலை நிலவரம் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறான நடைமுறைகளை மீறி செயற்படுபவர்கள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் அல்லது நேரடியாக எமது உத்தியோகத்தர்களால் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் குறித்த வர்த்தகர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நுகர்வோர்கள் இவ் விடயம் தொடர்பாக அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் முறைப்பாடுகளை 021775 5455 மற்றும் 021321 9000 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ -9)

# மாசிமக மஹோற்சவப் பெருவிழா

பருத்தித்துறை, தம்பசிட்டி அருள்மிகு ஸ்ரீ மஹாமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மாசிமக மஹோற்சவப் பெருவிழா நேற்று முன்தினம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை வரை தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தேர்த்திருவிழாவும், 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 5.30 மணியளவில் இன்பர்சிட்டி சமுத்திர தீர்த்த தக்கரையில் தீர்த்தோற்சவமும் இடம்பெற்ற அம்பாள் கிராம பிரதட்சணம் சென்று மாலை கொடியிறக்க வைபவமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-12)




# பொதுக்கூட்டம்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளின் 2017ஆம் ஆண்டிற்கான வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். சட்டநாதர் கோவில் வீதியில் அமைந்துள்ள இலங் கலைஞர் மண்டபத்தில் இடம் பெறும். (இ-3)








பருத்தித்துறை தும்பளை தெற்கு மார்க்கண்டுவின் பாதை தெரியாத பயணங்கள் நூல் வெளியீடு அண்மையில் இடம்பெற்றது. வடமராட்சி வடக்கு பிரதேச செயலரும் வடமராட்சி வடக்கு கலாசார பேரவைத் தலைவருமான ஆர். ரி. ஜெயசீலன் நூலை வெளியிட்டு வைக்க முதற்பிரதியை பருத்தித்துறை ராஜாராணி இல்ல நிறுவுநர் எஸ். இருதயராஜா பெற்றுக் கொண்டார்.



வடக்கு மாகாண பட்டதாரிகள் நேற்று ஐந்தாவது நாளாகவும் யாழ்.மாவட்டச் செயலகம் முன்பாக அரசாங்க வேலை வாய்ப்பைக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்றைய போராட்டத்தின் போது தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மாவை சேனாதிராஜா பட்டதாரிகளைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். (படங்கள் :-உ.சாளின்)

# வீதி சீரின்மை



வலிகாமம் வடக்கு ஜே/24 வறுத்தலை விளான் கிராமத்தின் அன்னம்மார் கோயில் சிறு வீதி குன்றும் குழியுமாகவும் மழை காலத்தில் சேறும் சகதியுமாகவும் காணப்படுகின்றது. இவ் வீதி 2 கிலோ மீற்றர் நீளம் கொண்டதாகும். இவ் வீதி ஊடாகவே கிராம சேவையாளர் அலுவலகம், வறுத்தலைவிளான் அமெரிக்க மிஷன் அ.த.க பாடசாலை போன்றவற்றுக்கு 292 குடும்பங்களும் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு கிராமத்தில் நடைபெறும் வீட்டுத்திட்டம், ஏனைய கட்டுமானப் பணிகளுக்கான மூலப்பொருட்களைக் கொண்டு செல்வதிலும் பெரும் சிரமங்கள் காணப்படுகின்றன.(இ-23)

# பாதயாத்திரை நடத்துவதால் ஆட்சியை மாற்றமுடியாது

## அமைச்சர் காமினி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சில மாதங்களுக்கு ஒரு பாதயாத்திரை நடத்தி ஆட்சி மாற்றம் செய்ய முடியாது என மேல் மாகாண விவசாய அமைச்சர் காமினி திலகசிறி தெரிவித்துள்ளார்.

வெலிகட பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவே ஸ்தாபித்தார். இந்த நாட்டை அதிகளவு காலம் சுதந்திரக் கட்சியே ஆட்சி செய்தது.

சுதந்திரக் கட்சியின் தலைவராக ஜனாதிபதி கடமையாற்றுகின்றார். நாட்டில் ஜனாதிபதி தொடர்பில் பெரியதொரு எதிர்பார்ப்பு காணப்படுகின்றது.

நாட்டில் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படும் போது அவற்றை தீர்த்து வைக்க ஜனாதிபதி தலையீடு செய்கின்றார். அவ்வாறே மத்திய வங்கியின் மின்சாரக் கட்டண உயர்வு போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கியுள்ளார்.

அந்த வகையில், மாலபே தனியார் கல்லூரி பிரச்சினைக்கும் காத்திர மான தீர்வுத் திட்டமொன்றை வழங்குவார் என எதிர்பார்க்கின்றோம்.

நாடாளுமன்ற தேர்தலின் பின்னர் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் அமர்வதற்கு ஜனாதிபதி இடமளித்துள்ளார்.

எனினும் சுதந்திரக் கட்சியை பிளவடையச் செய்ய அவர் எவருக்கும் அனுமதி வழங்கவில்லை என காமினி திலகசிறி சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

**பணம், காசு, துட்டு, மணி, மணி**

காட்போட், பழைய புத்தகங்கள், கொப்பிகள், Papers, Files, waste காகிதங்கள், Press வெட்டுத்துண்டுகள் காசு கொடுத்து வாங்கப்படும்.

**தொடர்புகளுக்கு : 0771365153**

**ST.JOHN'S COLLEGE, JAFFNA**
**CHUNDIKULI GIRLS COLLEGE, JAFFNA**
**ADMISSION-2018 FOR GRADE 1, GRADE 4, GRADE 6, & GRADE10**

தரம் 01, தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான அனுமதி 2018

1. அ. விண்ணப்பப் படிவங்களை அந்தந்தக்கல்லூரிகளிலிருந்து 03.03.2017 முதல் 20.03.2017 வரை பெற்றுக்கொள்ளலாம்.

ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 25.03.2017 வெள்ளிக்கிழமை. அத்திகதிக்கு பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.

2. தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி (photo copy) இணைக்கப்பட வேண்டும்.

3. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும் விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

4. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1000.00

5. வயதெல்லைகள்:

அ. தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2012 க்கும் 31.01.2013 க்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.

ஆ. தரம் 04 விண்ணப்பதாரி 01.02.2009 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

இ. தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2007 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

ஈ. தரம் 10 விண்ணப்பதாரி 01.02.2003 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

6. தரம் 12 (A/L 2020 Batch) விண்ணப்பதாரி 01.02.2001 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

7. தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான பிரவேசப் பரீட்சை 21.10.2017 சனிக்கிழமை காலை 08.00 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிப்பு:

01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.

02. தரம் 12 இற்கும் (A/L 2020 Batch) ஆங்கில மொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்) தமிழ்மொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை, தொழில்நுட்பவியல்) Londan A/L 2018/2019 இற்கும் விண்ணப்பப்படிவங்கள் சென்.ஜோன்ஸ் கல்லூரியிலும் ஏற்றுக்கொள்ளப்படும். அனுமதிப் பரீட்சை 02.01.2018 திங்கட்கிழமை காலை 08.30 மணிக்கு நடைபெறும். புதிய வகுப்புகள் 08.01.2018 திங்கட்கிழமை ஆரம்பமாகும். ஆண்டு 01 இல் மும்மொழிக்கற்கை நெறி அறிமுகப் படுத்தப்படுகின்றது.

03. சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12 (A/L தமிழ்/ஆங்கில மொழிமூலம் 2019 Batch) விண்ணப்பதாரிகள் O/L பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.

அதிபர்கள்

(சி-7713)

**கல்யாண மாலை**

இவர்களுக்கு **மணமகள் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா:13
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:B.Eng/ பொறியியலாளர் கனடா
தொ.இ: B/7026

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: செவ் 12 இல்
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/7027

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 32
உயரம்: 179cm
தகைமை/தொழில்:BBM, AIB/ வங்கியாளர்
தொ.இ: B/7029

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 10
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:லண்டன் PR
தொ.இ: B/7032

இவர்களுக்கு **மணமகன் தேவை**

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்
தொ.இ: G/7031

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 33செவ் 2 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்:BSc
தொ.இ: G/7033

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 13 செவ் 4 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/7034

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 32 செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BA/சைவபோசனம் மட்டும்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் மட்டும்
தொ.இ: G/7035

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai. jaffna@gmail.com**
**குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.**
**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.**

# வவுனியாவில் 8 ஆவது நாளாகவும் தொடர்ந்து சுழற்சிமுறை உணவுத் தவிர்ப்பு




வவுனியாவில் போராட்டத்தினை மேற்கொண்டு வரும்கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர்ந்தும் சுழற்சி முறையில் நேற்று 8 ஆவது நாளாகவும் தமது உணவுத் தவிர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக தீர்க்கமான முடிவை தெரிவிக்க வேண்டும், அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற மூன்று கோரிக்கைகளை முன்வைத்து இப்போராட்டம் நடைபெற்று வருகின்றது.

ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரில் ஒருவர் நேரில் வந்து சாதகமான பதில் வழங்கும் பட்சத்தில் மட்டுமே தமது போராட்டத்தை கைவிடப் போவதாகவும் அதுவரை தமது உறவுகளைத் தேடிய போராட்டம் தொடரும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (2-250)

# பயணப் பொதியில் கேரள கஞ்சா; சந்தேகநபர்களுக்கு விளக்க மறியல்

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட மாங்குளம் பொலிஸ் நிலையப்பிரிவில் மாங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக திடீரென வீதி பரிசோதனையை பொலிஸார் மேற்கொண்ட போது புதுக்குடியிருப்பில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பேருந்தை மறித்து சோதனை செய்த போது பயணப் பொதியில் மறைத்து வைத்து கொண்டு செல்லப்பட்ட கேரளக் கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் 2 நபர்களை கைது செய்துள்ளதாக மாங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த முதலாம் திகதி இரவு 8.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

அவசர பொலிஸ் இலக்கமான 119 இற்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, மாங்குளம் பொலிஸார் விசேட வீதிப் பரிசோதனையை மேற்கொண்ட போது 5, கிலோவும் 500 கிராமும் நிறையுடைய கேரளக் கஞ்சா பொதிகளைக் கைப்பற்றியுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்ற நிலையில் தடயப்பொருட்களுடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போது சந்தேக நபர்களை 14, நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15-281)



கிளிநொச்சி உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் விளையாட்டுக்கழகத்தில் கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையினரின் அனுசரணையுடன் மருத்துவ முகாம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகத்தில் நடைபெற்றது. லண்டன் ஓம் சரவணபவா அறக்கட்டளை மற்றும் கிளிநொச்சி றோட்டறிக் கழகம் ஆகியன ஒருங்கிணைந்து யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தியின் வேண்டுகோளுக்ிணங்க நடைபெற்ற இம் முகாமில் டாக்டர் மா. ஜெயராசா தலைமை தாங்கினார். பெருமளவிலான பொது மக்கள் இம் மருத்துவ முகாம் மூலமாக பயன் பெற்றமை குறிப் பிடத்தக்கது.

(படம்:- சிவநகர் செய்தியாளர்)

### 29 ஆவது நாள்

# புதுக்குடியிருப்பிலும் அறப்போர் நீடிக்கிறது



முல்லைத்தீவு புதுக் குடியிருப்பில் காணியை விடுவிக்குமாறு வலியுறுத்தி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக கடந்த பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தொடர் போராட்டம் நேற்று 29 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப் பட்டது. (2-28)

# ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்ட வீடொன்றில் துணிகரக் கொள்ளை

## 22 பவுண் நகைகள், 3 இலட்சம் பணம்

(மல்லாவி)

வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட ஓமந்தை பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தில் குடியிருக்கும் முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் வீட்டில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 12.30 மணியளவில் திருட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிற்கு சென்று விட்டு இரவு 11.30 மணியளவில் வீடு திரும்பிய நிலையில் உணவருந்திய பின்னர் வீட்டார் நித்திரைக்குச் சென்றுள்ளனர்.

இந் நிலையில் வீட்டார் அதிகாலை நித்திரை விட்டு எழுந்து பார்த்த போது வீட்டின் பின்புற ஜன்னலை உடைத்து உள்ளே புகுந்த திருடர்கள் வீட்டின் சுவாமிப்பட அறையின் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 3 இலட்சம் ரூபா பணம் மற்றும் 22 பவுண் நிறையுடைய நகைகள் என்பன களவாடப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இதையடுத்து பிரதேச செயலாளர், திருட்டுச் சம்பவம் தொடர்பில் ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

இது தொடர்பில் பிரதேச செயலாளரிடம் தொடர்பு கொண்டு வினவியபோது,

வீட்டில் சுவாமிப்பட அறையின் அலுமாரியில் வைக்கப்பட்ட கோவிலுக்குரிய 3 இலட்சம் ரூபா பணத்தையும் மற்றும் மனைவியின் தாலி, காப்பு, காதணிகள் உட்பட 22 பவுண் நகையையும் திருடிச் சென்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து ஓமந்தைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜ.பி.சுரேஸ் சில்வா தலைமையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மோப்ப நாய்களின் உதவியுடன், கைரேகை நிபுணர்கள் ஓமந்தை குற்றத் தடுப்புப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜ.பி.மகிந்த தலைமையிலானபொலிஸாரும்இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை நேற்று முன்தினமிரவு வேப்பங்குளம் ஓமந்தையிலுள்ள 7 ஆவது மற்றும் 3 ஆவது ஒழுங்கையில் திருட முற்பட்ட வேளை அந்நடவடிக்கை கைகூடாமையை அடுத்து 3ஆவது திருட்டாக கரைதுறைப்பற்று பிரதேச செயலரின் வீட்டினுள் நுழைந்து நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2- 15)




# சொந்த நிலம் கோரி கேப்பாப்பிலவு மக்களின் போராட்டம் தொடர்கிறது

## 3 ஆவது நாளான நேற்றும் முன்னெடுப்பு



கேப்பாப்பிலவுமக்கள்தமது பூர்வீக நிலம் கோரி கடந்த 2 ஆம் திகதிதொடக்கம்முல்லைத் தீவு மாவட்ட பாதுகாப்பு தலைமையகத்திற்கு முன்பாக முன்னெடுத்து வரும் போராட்டமானது மூன்றாவது நாளான நேற்றும் தொடர்ந்தது. கேப்பாப்பிலவு பிரதேசத் தில் சீனியா மோட்டை, சூரிபுரம் ஆகிய பகுதிகள் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் பிலவுக்குடியிருப்பு காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளன ஆதலால் தாம் பூர்வீகமாக வளர்ந்த கேப்பாப்பிலவு காணி விடுவிக்கப்பட வேண்டுமெனக் கோரியே மக்கள் போராட்டத்தினை ஆரம்பித்தனர்.(2-28)

# 'ஜனாதிபதிக்கு அருகில் நிற்பது எனது மகள்'

## புகைப்படம் ஏந்தியவாறு தாயொருவர் போராட்டம்



காணாமற்போன தமது உறவுகளை தேடித் தருமாறு கோரி, கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் முன்பாக காணாமல் போனவர்களின் உறவினர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த போராட்டமானது நேற்று 12ஆவது நாளாக நீடித்து வருகிற நிலையில், குறித்த போராட்டத்தில் ஜனாதிபதியின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

இந் நிலையில் காணாமற்போன தனது மகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அருகில் நிற்பது போன்ற புகைப்படத்தை தாய் ஒருவர் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

சிறுவர்களுடன்இணைந்து எடுக்கப்பட்ட இந்த புகைப் படம் எப்போது வெளியாகியதோ. அன்று தொடக்கம் குறித்த தாய் இது தனது பிள்ளை என உரிமை கோரி வருகின்றார். இருப்பினும் குறித்த சர்ச்சைக்குரிய புகைப்படம் தொடர்பில் தகவல்கள் வெளியாகவில்லை.

இவ்வாறு கடந்த மாதம் இடம்பெற்ற போராட்டத்தின் போது இவர் தனது கைகளில் ஜனாதிபதிக்கு அருகில் தனது மகள் இருப்பது போன்ற புகைப் படத்தை வைத்திருப்பதாக சுட்டிக்காட்டிய வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன், குறைந்தபட்சம் குறித்த சிறுமி பற்றியேனும்ஆராய்ந்து அவரை அவரது தாயுடன் இணைக்குமாறும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் இன்னமும் இவருக்கான தீர்வு கிடைக்கப்பெறாத நிலையில் மீண்டும் அந்த புகைப்படத்தினை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

இராணுவத்திடம் கையளித்த தமது பிள்ளைகளை தேடவேண்டிய அவசியம் தமக்குக் கிடையாதென தெரிவித்துள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் பெற்றோர், அவர்களை கையளிக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில்

# ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க 2 ஆயிரத்து 750 கடிதங்கள்

### மூன்று தினங்களில் கிடைக்கப்பெற்றன

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் அரசாங்கத்தை பொறுப்புக் கூற வலியுறுத்தி ஜனாதிபதிக்கு அனுப்புவதற்காக மூன்று தினங்களில் இரண்டாயிரத்து 750 கடிதங்கள் குவிந்துள்ளன.

தாயகப் பிரதேசத்தில் கையளிக்கப்பட்டும் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டோரை தேடியறியும் சங்கம் ஏற்பாடு செய்துள்ள சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டமானது வவுனியாவில் எட்டாவது நாளாக நேற்றும் நடைபெற்றுள்ளது.

இந்நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக தீர்க்கமான முடிவை தெரிவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்புவதற்கான நடவடிக்கையை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கடந்த 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பித்தன.

கடந்த 3 தினங்களில் இரண்டாயிரத்து 750 பேர் தமது கையொப்பங்களை இட்டு ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கான கடிதங்களை வழங்கியுள்ளனர்.

இதில் வவுனியா நகருக்கு வந்து செல்லும் பலரும் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர்.

இந்நிலையில் அக்கடிதங்கள் நாள் ஒன்றுக்கு ஆயிரம் வீதம் ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைளை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மேற்கொண்டுள்ளனர். (2-250)




# உறவுகளைத்தேடும் தொடர் கவனயீர்ப்பு கிளிநொச்சியில் 12ம் நாளாகவும் தொடர்ந்தது





கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் உறவு மீட்பு போராட்டம் நேற்று 12 ஆம் நாளாகத் தொடர்ந்தது.

கிளிநாச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டம் இரவு- பகலாக இடம்பெற்று வருகின்றது.

குறித்த போராட்டத்தில் முதியவர்கள் மழை, குளிர், கடும் வெப்பத்தின் மத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்ட, கடத்தப்பட்ட, புகைப் படங்களில் வெளியான தமது உறவுகள் எங்கு இருக்கிறார்கள் என தெரிவிக்க வேண்டும் எனக் கோரி கடந்த 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவன ஈர்ப்புப் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது. தமது உறவுகள் தொடர்பில் தகவல்கள் வெளியிடப்பட வேண்டும், அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மேற்கொள்ளும் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்திற்கு பலரும் ஆதரவு வழங்கி வருகின்றமை குறிப்பிட தக்கதாகும்.(2-15)

# கடத்துவதற்கு தயார் நிலையிலிருந்த 31 முதிரை மரப்பலகைகள் சிக்கின

### சந்தேக நபர்கள் கைதாகி விளக்கமறியலில்



வவுனியா மாவட்டத்தில் உள்ள பாலமோட்டை நவ்வி பகுதியில் மகேந்திரா பிக்கப் வாகனம் ஒன்றில் கடத்திச் செல்வதற்கு தயார் நிலையில் இருந்த 31 முதிரை பலகைகளுடன் சந்தேகத்தின் பேரில் சம்பவ இடத்தில் வைத்து இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக வன பரிபாலனத் திணைக்களத்தின் ஓமந்தை வட்டார வன அலுவலகத்தின் பொறுப்பதிகாரி ரீ. எம்.சமந்தா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை நடைபெற்றுள்ளது.

ஓமந்தை வட்டார வன அலுவலகத்திற்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பெரியமடுவில்உள்ளவிசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் வன பரிபாலனத் திணைக்கள ஓமந்தை வட் டார வன அலுவலகத்தின் அதிகாரிகள் சுற்றிவளைப்பை மேற்கொண்டபோதே குறித்த மரப் பலகைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர்.

கடத்தப்படவிருந்த முதிரைப் பலகைகள் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் அவர்களை தடயப் பொருட்களுடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நண்பகல் வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்திய போது சந்தேக நபர்களை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (2-15-250)

# ஐ.தே.கட்சியின் தலைமையகத்தினால் மன்னாருக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு

ஐக்கிய தேசிய கட்சியின் மன்னார் மாவட்டத்திற்கான புதிய அதிகார சபைக்கான நிர்வாகிகளை கட்சியின் தலைமையகம் தெரிவு செய்துள்ளது. சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதனின் வழிகாட்டுதலிலும், அவரின் இணைப்புச் செயலாளர் பிறேம்லஸ் கொஸ்ராவின் நெறிப்படுத்துதலிலும், குறித்த புதிய நிர்வாகிகள் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் ஐக்கிய தேசிய கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


இதற்கமைவாக ஐக்கிய தேசிய கட்சியின் மன்னார் மாவட்ட முகாமையாளராக ஏ.சமீயூ முகம்மது பஸ்மியும் மாவட்ட நீதி விவகாரச் செயலாளராக் சட்டத்தரணி எம்.ஏ. முகம்மது முபாறக்கும் மாவட்ட அத்தியாவசிய சேவைகளின் செயலாளராக ஏ.பி. முகம்மது ஹஸ்மீனும் மாவட்ட இளைஞர் விவகார செயலாளராக கிரேசியன் பெர்ணான்டஸ் கூஞ்சாவும் மாவட்ட கிளை அமைப்புக்களின் இணைப்புச் செயலாளராக தேவசகாயம் தவசீலனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் மாவட்ட மகளிர் விவகார செயலாளராக பாத்திமா பஸ்னாஸ் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பு செயலாளராக கிப்பொலிற் கத்தறின் வயலட் குரூஸ், மாவட்ட பிரசாரச் செயலாளராக ரகுநாதன் வதனா உட்பட மாவட்ட தொழிற்சங்க செயலாளராக விக்டர் ஜெபநேசன் பிரதீபன், மாவட்ட ஊடக செயலாளராக தேவசகாயம் ரஞ்சித்குமார் சோசை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் வாக்காளர் விவகாரங்கள் மற்றும் தேர்தல்கள் தொடர்பான மாவட்ட இணைப்பாளராக எம்.எம்.முகம்மட் ஜெசின், கத்தோலிக்க விவகாரங்களின் மாவட்டச் செயலாளராக சனிக்கிலாஸ் மீயேஸ், முஸ்லிம் விவகாரங்களுக்குரிய மாவட்டச் செயலாளராக அப்துல் காசீம் றஹ்மத்துல்லா, இந்து மத விவகாரங்களுக்குரிய மாவட்டச் செயலாளராக குப்புச்சாமி ஆறுமுகம் ஆகியோரும் தெரிவாகியுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக்கடிதங்கள் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவினால் விரைவில் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.(2-4-9)

# செட்டிகுளத்தில் ஒன்பது மில்லியன் செலவில் கிராமிய சித்த வைத்தியசாலை திறந்து வைப்பு






வவுனியா செட்டிகுளத்தில் சித்த வைத்தியசாலை கட்டடத்தொகுதி புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தினால் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

சுகாதார சேவையை வலுப்படுத்தும் நோக்கத்தை அடிப்படையாக கொண்டு 2016 ஆம் ஆண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை நிதியில் இருந்து 9 மில்லியன் ரூபாய் செலவில் கிராமிய சித்த மருத்துவமனை அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டதுடன் மரக்கன்று நாட்டும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான , செந்தில்நாதன் மயூரன், ஜெயதிலகா, சுதேச மருத்துவ திணைக்களத்தின் வடக்கு மாகாண ஆணையாளர் திருமதி.துரைரட்ணம். வைத்தியர் மகேந்திரன், சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ப.சத்தியசீலன், வைத்தியர்கள், நலன் விரும்பிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# மண் அகழ்வு இயந்திரத்தை ஏற்றி பயணித்த பாரவூர்தி தடம்புரள்வு

(மல்லாவி )

வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட ஓமந்தைப் பொலிஸ் நிலையப்பிரிவில் ஏ-9 வீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக மண் அகழ்வு இயந்திரத்தை ஏற்றிப் பயணித்த பாரவூர்தி தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் 3 பேர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஓமந்தை பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 7 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

ஓமந்தை பகுதியில் இருந்து வவுனியா நோக்கி மண் அகழ்வு இயந்திரத்தை ஏற்றிப் பயணித்த பாரவூர்தி திடீர் என வீதியை விட்டு விலகி தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இதன்போது, பாரவூர்தியில் பயணித்த மூவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு விரைந்த ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-15)

# பிரதம நீதியரசர் நியமனத்தின் போது அரசியலமைப்புச் சபை ஒழுங்கை மீறியது

## முன்னாள் அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் நியமனத்தின் போது அரசியலமைப்புச் சபை ஒழுங்கை மீறியுள்ளதாக முன்னாள் அமைச்சரும் மகிந்த சார்பு அணி பாராளுமன்ற உறுப்பினருமான ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசியலமைப்புச் சபை அமைக்கும் போது அதன் மீது எமக்கு பாரிய எதிர்பார்ப்பு இருந்தது. அதன் செயற்பாடுகளை அவதானிக்கும் போது எமக்கு நம்பிக்கை வைக்க முடியாதுள்ளது. பொலிஸ்மா அதிபர் நியமனத்தின் போதும் சிரேஷ்ட உறுப்பினர்களை அரசியலமைப்பு சபை கருத்தில்கொள்ளவில்லை.



அதேபோன்று பிரதமர் நீதியரசர் நியமனத்தின் போதும் சிரேஷ்டமானவர்கள் முன்னுரிமைப்படுத்தப்படவில்லையெனவும் அரசியலமைப்புச் சபை மீது பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் குற்றம்சாட்டினார். (இ-7)

# களனி கங்கையில் மாற்றம்



(கொழும்பு)

இலங்கையின் பணமீட்டும் பிரதான மார்க்கமாக களனி கங்கையை மாற்ற வேண்டும் என மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

லண்டன், ஜேர்மன், கொரியா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் காணப்படும் நதிகளை அவர் இதற்கு உதாரணமாக தெரிவித்தார்.

அதன்படி களனி கங்கை, அத்தணகள ஓயா மற்றும் களுகங்கை ஆகியன தொடர்பில் பலநோக்குத் திட்டம் செயற்படுத்துவது அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சமீர மீது நாம் குறி வைத்திருந்தால் தவறியிருக்காது - லால் காந்த



சைற்றம் சமீர சேனாரட்ன மீது நாம் குறி வைத்திருந்தால், அது தவறியிருக்காது என மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய செயற்குழு உறுப்பினர் லால் காந்த தெரிவித்தார்.

சைற்றம் சமீர மீதான தாக்குதலுக்கு எம்மீதும் ஆரம்பத்தில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. தற்பொழுது யார் அதனை மேற்கொண்டார் என்பது விசாரணைகள் மூலம் நாட்டுக்குத் தெரிய வந்து கொண்டிருக்கின்றது.

விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ள உண்மைகளை மூடிமறைக்க முயற்சிக்காமல் உரிய முறையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சிறைச்சாலை, நீதி அமைச்சர்கள் இராஜினாமா செய்ய வேண்டும்

(கொழும்பு)

சிறைச்சாலை பேருந்து மீது களுத்துறை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்துக்குரிய பொறுப்பை ஏற்றுக் கொண்டு சிறைச்சாலைகள் அமைச்சரும், நீதி அமைச்சரும் தமது அமைச்சுக்களிலிருந்து உடன் இராஜினாமா செய்ய வேண்டும் என இலங்கை சமசமாஜ கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அக்கட்சியின் அரசியல் சபை உறுப்பினர் பத்தேகம சமித தேரர் இதனைக் கூறியுள்ளார். (இ-7)

# துப்பாக்கி, ரவைகளுடன் மாபிடிகமவில் ஒருவர் கைது

மாபிடிகம பகுதியில் துப்பாக்கி மற்றும் ரவைகளுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபரிடமிருந்து ஒரு கைத்துப்பாக்கி மற்றும் 3 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர் இரு கொலைச்சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் என தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் அங்கொட மற்றும் அதுருகிரிய பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் சந்தேக நபர் கடுவலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன், மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# 'ஜெ' மரணத்திலுள்ள சந்தேகம் தீரும் வரை போராட்டம் தொடரும்

## ஓ.பி.எஸ். அறிவிப்பு

(சென்னை)

ஜெயலலிதாவின் மரணத்தில் உள்ள சந்தேகம் தீரும் வரை போராட்டம் தொடரும் எனவும் மரணம் தொடர்பில் தமிழக மக்களுக்கு சந்தேகம் இருப்பதாகவும் தமிழக முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

சென்னை கீரின்வேஸ் பகுதியில் அமைந்துள்ள அவரது வீட்டில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்களை சந்தித்த அவர் இவ்வாறு தெரிவித்தார். தன்னை முதலமைச்சர் பதவியில் இருந்து விலகக்கோரி பல்வேறுபட்ட அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதாகவும் இதன் காரணமாகவே தான் முதலமைச்சர் பதவியில் இருந்து இராஜினாமா செய்து கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.



மேலும், ஜெயலலிதாவின் உடல் நிலை பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது அவரை வெளிநாட்டு வைத்தியசாலைக்கு அழைத்து செல்ல முற்பட்ட போது அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என கவலை வெளியிட்டார்.

ஜெயலலிதாவிற்கு தீவிர நோய்கள் எதுவும் இருக்கவில்லை எனவும் எனவே அவரின் மரணம் குறித்து தமிழக மக்களுக்கு சந்தேகம் இருப்பதாகவும் தெரிவித்தார். ஜெயலலிதாவின் மரணம் குறித்து மத்திய அரசு உரிய விசாரணை நடத்த வேண்டும் என்றும் இதன்போது வேண்டுகோள் விடுத்தார். (இ-12)

# இயற்கை விவசாயத்தை மேற்கொள்ள எமது விவசாயிகள் முன்வர வேண்டும்

## விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இயற்கை விவசாயத்தால் அதிகரித்துவரும் சனத்தொகைக்கு உணவு படைக்க முடியாதென்று விவசாய இரசாயனங்களை உற்பத்தி செய்துவரும் பன்னாட்டு நிறுவனங்களும், கலப்பின விதைகளுக்கும் மரபணுமாற்று விதைகளுக்கும் காப்புரிமை பெற்று வைத்திருக்கும் பன்னாட்டு நிறுவனங்களும் பரப்புரை செய்து வருகின்றன.

ஆனால், கியூபா ஏற்கனவே இயற்கை விவசாயத்தை வெற்றிகரமாகச் செய்து காட்டியுள்ளது. இந்தியாவில் சீக்கிம் மாநிலம் முற்று முழுதாகச் சேதன விவசாயத்துக்குத் திரும்பியிருக்கிறது. கோவா மாநிலமும் ராஜஸ்தான் மாநிலமும் சேதன விவசாயத்துக்கென மிக அதிகளவு நிலப்பரப்பை ஒதுக்கியுள்ளன. எங்களது விவசாயிகளும் இயற்கை விவசாயம் மேற்கொள்ள முன்வர வேண்டும். ஏற்கனவே குறைந்த எண்ணிக்கையானோர் இயற்கைவழி விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த எண்ணிக்கை அதிகரித்து இலங்கையில் இயற்கை விவசாயத்தில் வடமாகாணம் முன்னிலை என்ற இலக்கை எட்ட வேண்டும் என்று விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

இயற்கை விவசாயத்துக்குரிய இடுபொருட்களை உற்பத்தி செய்யும் கிறீன் விஸ்வா என்ற நிறுவனம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சங்கானையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கனடா நாட்டின் 24 மில்லியன் ரூபா நிதியுதவியில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக அமைக்கப்பட்டுள்ள இந்நிறுவனத்தை திறந்து வைத்து உரையாற்றிய போதே அமைச்சர் ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இரசாயனங்களை நம்பிய விவசாயம் உழவர்களை மட்டும் பாதிக்கவில்லை. நுகர்வோர் அனைவரினதும் பிரச்சினையாக மாறியுள்ளது. விவசாய இரசாயனங்கள் நிலத்தடி நீரை நச்சுப்படுத்தி வருகின்றன.

விவசாய இரசாயனங்கள் உணவின் மூலம் எமது உடலின் உள்ளே குவிந்து வருகின்றன. நாம் இன்று அனுபவித்து வரும் புதிய புதிய நோய்களுக்கு உணவின் சத்துக்குறைபாட்டை விட உணவில் அதிகமாக ஊறிப்போயிருக்கும் நச்சு இரசாயனங்களே காரணமாகும். இந்தப் பாதிப்புகளில் இருந்து விவசாயிகளும் உலகமும் மீண்டெழுவதற்கு இயற்கை வழி விவசாயத்துக்கு திரும்புவது காலத்தின் கட்டாயம் ஆகும் என்றும் தெரிவித்துள்ளார். (இ-3)

# கையைப் பிடித்து சிறுமிக்கு ஆறுதல் கூறிய ஜனாதிபதி



(கொழும்பு)

கேகாலை புனித மரியாள் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்ட ஜனாதிபதியை மாணவர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

இதன்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாணவர்களோடு சுமுகமாகக் கலந்துரையாடியதுடன் பாடசாலையில் நிலவும் குறைபாடுகளையும் கேட்டறிந்துள்ளார்.

குறித்த சந்தர்ப்பத்தில் கையில் அடிபட்டு கட்டுப் போட்டிருந்த ஒரு மாணவிக்கு கையைப் பிடித்து ஆறுதல் கூறியுள்ளார்.

இதேவேளை, மாணவர்களின் ஆக்கங்கள் வைக்கப்பட்டிருந்த கண்காட்சிக் கூடங்களையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக தமது திறமைகளை வெளிக் காட்டிய மாணவர்களுக்கு ஜனாதிபதி விருதுகளையும் வழங்கி வைத்துள்ளார். (இ-7)

# கொழும்பை சுற்றித் திரியும் தங்கக் கார்!



கொழும்பு நகர வீதிகளில் தங்க நிறத்திலான கார் ஒன்று சுற்றித் திரிவதாக சில வாரங்களுக்கு முன்னர் தகவல் வெளியாகியிருந்தது.

இந்நிலையில்அதேபோன்று மற்றுமொரு தங்க நிறத்திலான கார் கொழும்பை சுற்றி வருகின்றது. அந்த காரின் பதிவு இலக்கத்தை கொண்டு, அதன் உரிமையாளர் யார் என்பது தொடர்பில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த பிரபல நபரான Sheymon Rauff என்பவரினால் இந்த கார் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. "gold chrome wrap" நிறுவனத்தின் முதலாவது "Overfinch Range Rover" காரே இவ்வாறு இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (இ-7)

# சீனாவில் விரைவில் இரத்த ஆறு ஓடும்

## தீவிரவாதிகளின் எச்சரிக்கையால் திடீர் பதற்றம்



சீனாவில் விரைவில் இரத்த ஆறு ஓடும் என்று ஐ.எஸ். தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சிரியாவை தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் ஐ.எஸ். தீவிரவாதிகள், உலகம் முழுவதும் இருந்து தங்கள் அமைப்புக்கு ஆட்களைச் சேர்த்து வருகின்றனர்.

அவ்வாறு ஐ.எஸ். அமைப்பில் இணையும் இளைஞர்கள் அவரவர் சொந்த நாடுகளில் தீவிரவாத தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த பாணியில் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு பல்வேறு தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதே பாணியில் சீனாவிலும் தாக்குதல் நடத்துவோம் என்று ஐ.எஸ். தீவிரவாதிகள் முதல் முறையாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

### உய்குர் முஸ்லிம் பிரச்சினை?

சீனாவின் வடமேற்கு பகுதியில் தன்னாட்சி அதிகாரம் பெற்ற ஜின்ஜியாங் மாகாணம் உள்ளது. திபெத்தைப் போன்று கடந்த 1949 இல் ஜின்ஜியாங் பகுதியை சீன கம்யூனிச அரசு ஆக்கிரமித்தது.

இதைத் தொடர்ந்து அந்த மாகாணத்தில் சீனர்கள் பெரும்பான்மையாக குடியேறினர். அங்கு பூர்வீகமாக வசித்த உய்குர் முஸ்லிம்கள் சிறுபான்மையினமாயினர்.

கடந்த 1990இல் உய்குர் முஸ்லிம்கள், தனி நாடு கோரி வீதிகளில் இறங்கி கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அந்த கிளர்ச்சியை சீன இராணுவம் ஒடுக்கியது. இதில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கடந்த 2009 இல் உய்குர் முஸ்லிம்களுக்கும் சீனர்களுக்கும் இடையே வன்முறை வெடித்தது. இதில் 200 இற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் உயிரிழந்தனர்.

சீன இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தாலும் உய்குர் முஸ்லிம்களின் தனிநாடு கோரிக்கை நீறு பூத்த நெருப்பாகவே உள்ளது. ஆரம்பத்தில் அல்கொய்தாவுடன் இணைந்திருந்த உய்குர் கிளர்ச்சியாளர்கள் தற் போது ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் கைகோர்த்துள்ளனர்.

### ஐ.எஸ். எச்சரிக்கை?

அதன்படி சிரியா, ஈராக்கில் உள்ள ஐ.எஸ். தீவிரவாத முகாம்களில் உய்குர் முஸ்லிம் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.


அவர்களை மையமாக வைத்து ஐ.எஸ். தீவிரவாதிகள் புதிய வீடியோவை வெளியிட்டுள்ளனர். சுமார் 30 நிமிடங்கள் ஓடும் அந்த வீடியோவில் சீனாவுக்கு பகிரங்கமாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐ.எஸ். வீடியோவில், உய்குர் முஸ்லிம் இளைஞர்கள், சிறுவர்கள் ஆயுதப் பயிற்சி, தற்காப்பு கலைப் பயிற்சியில் ஈடுபடும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

அதில் ஒரு தீவிரவாதி கூறியிருப்பதாவது, உய்குர் முஸ்லிம்களின் விருப்பத்தை சீன மக்கள் புரிந்து கொள்ளவில்லை. நாங்கள் ஐ.எஸ். இயக்கத்தின் மாவீரர்கள். விரைவில் சீனாவுக்கு வருவோம்.

அப்போது ஆயுதங்களால் உங்களோடு பேசுவோம். சீனாவில் இரத்த ஆறு ஓடும். எங்களை அடக்க நினைப்பவர்களை பழி வாங்குவோம். இவ்வாறு அந்த தீவிரவாதி எச்சரிக்கை விடுத்துள்ளார். இதனால் சீனாவில் திடீர் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (இ-12)

# விக்னேஸ்வரன் இனவாதி என சுதந்திரக்கட்சி மீள விமர்சனம்



(கொழும்பு)

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இனவாதியைப் போன்றுதான் எப்போதும் செயற்பட்டு வருவதாக நல்லாட்சி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சிகளில் ஒன்றான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பாக பிரச்சினைகளைத் தோற்றுவித்து குழப்பத்தை ஏற்படுத்தவே இவ்வாறானவர்கள் செயற்பட்டு வருவதாகவும் அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினரும், மேல் மாகாண முதலமைச்சருமான இசுறு தேவப்பிரிய பகிரங்கமாக விமர்சித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய,

"தேசிய பாதுகாப்பு தொடர்பாக பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் சில குழுக்கள் உள்ளன.

வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் முழுமையாக ஓர் இனவாதியைப் போன்றுதான் செயற்படுகின்றார்.

மேல் மாகாணத்தில் குறிப்பாக கொழும்பு மாவட்டத்தில் முஸ்லிம் மக்களே அதிகமாக உள்ளனர்.

இரண்டாவதாக தமிழ் மக்களும் மூன்றாவதாக சிங்கள மக்களும் உள்ளனர். எனினும் இந்த மக்களின் நம்பிக்கையை நாம் வென்றிருக்கின்றோம். இனவாதத்தைப் பிடித்துக் கொண்டு ஒருநாளும் முன்னோக்கி நகர முடியாது. அனைத்து இனங்களிடையேயும் ஐக்கியத்தை ஏற்படுத்தியே பயணத்தை மேற்கொள்ள முடியும். அதேபோல அரசியலமைப்பு திருத்தம் வரும் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமது ஆளுகைக்குக் கீழ்ப்பட்டது என்று நினைத்துக் கொண்டுதான் ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள சிலர் கருத்துக்களைக் கூறி வருகின்றனர். அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலும், ஜனவரி 8ஆம் திகதி ஜனாதிபதியுடன் இருக்காதவர்களே அரசியலமைப்புக்கு முரணாக செயற்படுவதாக ஒருவர் கூறியுள்ளார்.

அது உண்மைதான். ஆனால் ஜனவரி 8ஆம் திகதி இருந்த நாடாளுமன்றம் அல்ல இப்போது இருப்பது. சுதந்திரக் கட்சி தனது சட்டைப்பையில் இருப்பதைப் போன்றுதான் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கருத்து தெரிவித்திருக்கின்றார்.

எனவே தெளிவாகக் கூறுகின்றோம். நாம் ஒரு போதும் ஐக்கிய தேசியக் கட்சிக்காக கடைக்குச் செல்ல மாட்டோம். யாராலும் தனித்து ஒரு அரசாங்கத்தை உருவாக்கவும் முடியாது" என்றார். (செ-11)

# சீனிக்கு கட்டுப்பாட்டு விலையை நீக்குவதற்கு அரசாங்கம் சம்மதம்

சீனிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விலையை நீக்குவதற்கு, அரசாங்கம் சம்மதித்துள்ளது.


அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யும் இறக்குமதியாளர்களின் கோரிக்கையைத் தொடர்ந்தே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையிலான வாழ்க்கைச் செலவுச் செயற்குழுவே, இந்த முடிவை எடுத்துள்ளது. இதுகுறித்து கருத்துத் தெரிவித்த, அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் பேச்சாளரொருவர், சீனிக்கான சில்லறை விலையாக, 93 ரூபாயைக் கட்டுப்பாட்டு விலையாக நிர்ணயித்த போதிலும், அந்த விலையில் சீனியை விற்பது, சாத்தியமற்ற ஒன்றாக இருந்ததாகத் தெரிவித்தார்.

"அந்தக் கட்டுப்பாட்டு விலையை நீக்குவதற்கு நாங்கள் முயன்றோம். அது ஏற்கப்பட்டது. இது சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தல், விரைவில் வெளியிடப்படும்" என்றார்.

இதேவேளை, உள்ளூர் அரிசிக்கும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக்குமென, இரு வேறான கட்டுப்பாட்டு விலைகளை நிர்ணயிக்க வேண்டாமெனவும் தாங்கள் கோரிய போதிலும், அந்தக் கோரிக்கை ஏற்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கனேடிய உயர்மட்ட அதிகாரிகள் சம்பந்தனுடன் சந்தித்துப் பேச்சு



கனேடிய பூகோள விவகாரங்களுக்கான திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளது.

அரசியல், வர்த்தக மற்றும் அபிவிருத்தி சார்ந்த விவகாரங்களைக் கையாளும் கனடாவின் பூகோள விவகாரங்களுக்கான திணைக்கள அதிகாரிகள், இலங்கை பயணத்தின் போது பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் புலமையாளர்களையும் இந்தக் குழுவினர் நேற்று முன்தினம் சந்தித்துள்ளனர்.

இந்தச் சந்திப்புகளில் இருதரப்பு உறவுகள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது. இலங்கைக்கான கனேடியத் தூதுவரும் இந்தச் சந்திப்புகளில் பங்கேற்றார். (இ-7)

# நாகபடுவானில் நாக இனக்குழுவின் தொட...






பூநகரிப் பிரதேச நிர்வாக எல்லைக்கு உட்பட்ட முழங்காவில் குமுழமுனை வட்டாரங்களுக்கு இடைப்பட்ட நாகபடுவான் என்ற பாரம்பரிய கிராமத்திற்கு உட்பட்ட காட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் அகழ்வாய்வில் கிடைத்து வரும் நம்பகத்தன்மை வாய்ந்த ஆதாரங்கள் வரலாற்றிலக்கியங்களில் புகை படர்ந்திருக்கும் வட இலங்கையின் பூர்வீக வரலாறு பற்றிய பல கேள்விகளுக்கு விடை கூறுவதாக உள்ளன. அவற்றுள் ஒன்றே கடந்தவாரம் யாழ்ப்பாணப் பல்கலை. தொல்லியற்பிரிவு ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து அங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் கண்டுபிடித்த பூர்வீக மக்களது வழிபாட்டு மையமாகும். எமது பல்கலைக்கழக நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட இவ்வகழ்வாய்வுக்கு வடமாகாண மத்திய கலாசார நிதியம் மற்றும் தொல்லியற் திணைக்களம் அனுசரணையாக இருந்ததுடன் தொல்லியற் திணைக்கள மாவட்ட இணைப்பாளர்களான பா. கபிலன், மணிமாறன் மற்றும் அருள்ராஜ் ஆகியோர் அகழ்வாய்வுக்கு வேண்டிய தொழில்நுட்ப உதவியாளர்களாகப் பணி புரிந்தனர்.

நாகபடுவான் அகழ்வாய்வில் வரலாற்றுப் பெறுமதிமிக்க பல சின்னங்கள் கிடைத்து வரும் நிலையில் அகழ்வாய்வுக்கு உட்படுத்திவரும் ஒரு அகழ்வுக் குழியின் ஒருபகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட சமய வழிபாட்டு மையத்தின் வடிவம் இதுவரை இந்தியாவிலோ அல்லது இல ங்கையிலோ கண்டுபிடிக்கப் பட்டதாகத் தெரியவில்லை. அவ்வாய்வுக் குழியின் மையத் தின் நடுப்பகுதியில் சிறியவாய்ப் பகுதியை உடைய பெரிய மண் பானையும் அதன் மேற்பகுதியில் கவிழ்ந்த நிலையில் ஒட்டி வைக்கப்பட்ட சிறிய கலசங்களும் உள்ளன. இப்பானையைச் சுற்றி சுடுமண்ணாலான சதுரவடிவான மூன்று பீடங்களும் அப்பீடங்களில் அமர்ந்திருந்த தெய்வ அல்லது மனித உருவத்தின் கால்கள் இப்பானையைத் தொட்ட நிலை யிலும் காணப்பட்டன. தற்போது இவ்வுருவங்களின் தலைப் பகு திக்குரிய முடிகள், காதுப் பகுதிகள் மட்டும் கிடைத்திருப்பதால் இவ் வுருவங்கள் மனிதனா அல்லது தெய்வமா என்பதை உறுதிப் படுத்த முடியவில்லை. இந்த மூன்று பீடங்களை அடுத்து நான் காவதாக நடுவில் உள்ள பானையை ஒட்டி மண் சட்டியின் விளிம்பில் படமெடுத்த நிலையில் ஐந்து தலை நாகம் காணப்படுகிறது. இவ்வாதாரங்கள் எமக்குப் புதிதாகக் தோன்றியதால் இத்துறையில் புலமையுடைய இலங்கை மற்றும் இந்திய அறிஞர்களுக்கு இவற்றின் புகைப் படங்களை அனுப்பி அவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டிருந் தோம். அவர்கள் இவற்றை அதிமுக்கியத் துவம் வாய்ந்த கண்டுபிடிப்பு எனக் குறிப்பிட்டிருந்தாலும் அதற்கு கொடுக்கப்பட்ட விளக்கங்களில்வேறுபட்டு இருந்ததனால் ஒருபொருத்தமானமுடிவுக்குவரமுடியவில்லை.

ஆயினும் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பாக தெற்காசியாவின் தலைசிறந்த தொல்லியல் அறிஞர்களில் ஒருவரான வை.சுப்பராயலு இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட பானைக்குள் இருக்கும் மண்ணை கவனமாக அகற்றிப் பார்த்தால் இதன் முக்கியத்துவம் தெரியவரும் எனக் கூறினார்.



அதன் அடிப்படையில் பானைக்குள் இருந்த மண்ணை அகற்றிப் பார்த்தபோது அதற்குள் சுடு மண்ணாலான நாக உருவத்தைக் காண முடிந்தது. அத்துடன் பானையின் அடிப்பாகம் வட்டமாக துவாரமிடப்பட்டு அதன் அடிப்பகுதி நிலத்துடன் பொருந்துமாறு புதைக்கப் பட்டது என்பதும் தெரியவந்தது. இங்கு மேற்கொள்ளப் பட்ட அகழ்வாய்வில் பல்வேறு வடிவங்களில் நாக உருவங்கள் கிடைத்த போதும் பானைக்குள் இருந்த

நாக உருவ...
பானை ...
பாம்பின் வ...
இப்பாம்...
வடிவமைப்...
கலாநிதி ...
விளக்கம் ...
காணப்ப டுகி...
சுற்றி கவி...
ங்களை பா...
ளாகவும் பா...
புற்றிலிருந்...
குறிப்பிட்டு ...

# ஜி.எஸ்.பி.பிளஸை பெற்றுக்கொள்ள இலங்கைக்கு ஸ்பெயின் ஆதரவு

(ஜெனிவா)

இலங்கை ஜி.எஸ்.பி. பிளஸ் ...லுகையை பெற்றுக்கொள்ள ...ரண ஆதரவு வழங்கப்படும் ...ன்று வெளி விவகார அமைச் ...ர் மங்கள சமரவீரவிடம் ஸ்பெயின் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் அமைச்சர் மங்கள சமரவீரவை சந்தித்து உரையாடிய ஸ்பெயின் வெளிவிவகார அமைச்சர் இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

இருதரப்பு வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் இருவரும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

ஸ்பெயின் தூதரகத்தை இலங்கையில் ஸ்தாபிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இலங்கைக்கு ... சுற்றுலாத்து...

சுற்றுலாத்துறையின் அதிசிறந்த விருது இலங்கை... சோவில் இடம்பெற்ற சர்வதேச பயண கண்... வழங்கப்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டிலிருந்து ... வளர்ச்சிக்கு சீனாவும் ஆதரவாக செயற்பட்டு வருகி...

இலங்கையின் சுற்றுலாத் துறை அபிவிருத்தி நட வ... இணைந்து செயற்படுகின்றது. இந்நிலையில், சீன கு... குறித்த கண்காட்சி வெற்றியளித்துள்ளதாக தெரிவி... நிகழ்வில் இலங்கையைச் சேர்ந்த 19 சுற்றுலா நி... குறிப்பிடத்தக்கது.

# இரட்டைக் கொலைகளுடன் தொடர்புடைய ஒருவர் கைது

(கொழும்பு)

அங்கொட, அத்துருகிரிய பகுதி ...ளில் இடம்பெற்ற இரண்டு கொலைச் ...ம்பவங்களுடன் தொடர்புடைய ...ந்தேகநபரை மிரிஹான பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரை கைது செய்யும் போது அவரிடமிருந்து துப்பாக்கித் தோட்டாக்கள் மூன்றினை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மிரிஹான பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கலைஞர்களுக்கான ஒன்றுகூடல் யாழில்

யாழ். மாவட்ட திரைப்படக் கலைஞர்களுக்கான ஒன்றுகூடல் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பழைய பூங்காவில் (old park) இடம்பெறும். அனைத்து திரைப்படம் கலைஞர்களையும் ஒன்று கூடுமாறு இயக்குநர் சுதர்ஷன் ரட்ணம் அறிவித்துள்ளார். (இ-3)

# பேருந்து தரிப்பிட...

வல்லை தூப்புலச் சந்தியில் அமைக்கப்பட்ட பேரு... ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறு... மோகன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வி... உறுப்பினர் வே.சிவயோகன் திறந்து வைப்பார். ... றெஜினாவின் ஞாபகார்த்தமாக அவரது உறவினர்க... கும். இந் நிகழ்வில் கரவெட்டி பிரதேச சபை இ.போ... பாடசாலை அதிபர்கள் எனப் பலர் கலந்து கொண்ட...

# டக்ககால வழிபாட்டு மையம் கண்டுபிடிப்பு



ருவம் மண்ணில் நாட்டப் பட்டு அதை மூடி
ா வைக்கப் பட்டிருக்கலாம் என்பதைப்
ன் வடிவம் உறுதி செய்கிறது.

பாம்பை மூடி அமைக்கப்பட்ட பானையின்
மைப்பிற்கு எனது தொல்லியல் ஆசான்
தி பொன்னம்பலம் இரகு பதி கூறும்
கம் பொருத்தமா கவும் சுவாரஸ்யமாகவும்
ப டுகிறது. அவர் பானையின் விளி ம்பைச்
கவிழ்ந்த வடிவில் உள்ள சிறிய கலச
ள பாம்புப் புற்றில் வரும் சிறிய துவாரங்க
ும் பானையின் சிறிய வாய்ப்பகுதி பாம்புப்

தெய்வத்தின் ஆலயமாக கொண்டு படையல் செய்து வழிபடும் மரபு தோன்று வதற்கு முன்னோடியாக இருந்த பூர்வீக வழிபாட்டு மர பையே நாகபடுவானில் கண்டுபிடிக் கப் பட்ட வழிபாட்டு மையம் உறு திப்படுத்துவதாகவும் கூறுகிறார். பாம்புப்புற்றை நாக வழிபாட்டுக் குரிய ஆலயமாக வழிபடும் மரபு பண்டு தொட்டு இருந்து வருகி றது. வட இலங்கையில் இன்றும் நவாலி போன்ற இடங்களில் பாம்புப் புற்றுக்கு படையல் செய்து வழிப டும் மரபு காணப்படுகிறது. சில இடங்களில் பாம்புப்புற்று கருவ றையில் வைக்கப்பட்டு அதன் மேல் ஆலயம் கற்களால் கட்டப்பட் டுள்ளன. பொதுவாகத் தெற்கா சியாவில் நாகத்தை குல மரபு தெய்வமாகக் கொண்டு வழி படும் மக்கள் தமது பெயர்களின் முன் னொட்டுச் சொல்லாக "நாக" என்ற பெயர் கொண்டும் அழைக் கும் மரபு இன்றும் காணப்படு கின்றது.

இலங்கை வரலாறு கூறும் பாளி இலக்கியங்கள் வட இந்தி யாவில் இருந்து விஜயன் தலை மையில் மக்கள் குடியேற முன் னர் ஈழத்தில் வாழ்ந்த மக்களை நாக இனத்தவர் எனக் கூறுகின் றன. பேராசிரியர் சத்த மங்கல கருணாரத்தினநாகர் இலங்கை யில் வாழ்ந்த இனக் குழு என்ப தற்கு 2200 ஆண்டுகளுக்கு முற் பட்ட கல்வெட்டுக்களை ஆதாரமா கக் காட்டுகிறார். பேராசிரியர் பரண விதான, சிரான் தெரணியகல காலப்பண்பாட்டை அறிமுகப்படுத்திய வர்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்த நாக இன மக்கள் எனக் கூறுகின்றனர். பேராசிரியர் சுப்பரா யலு நாகபடுவானில் கண்டு பிடிக் கப்பட்ட நாக வழிபாட்டு மையம் பெருங்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாக இருக்கலாம் எனக் கூறுகிறார். இந்தநாக இன மக் களே இலங்கையில் தமிழ் மொழி பேசும்மக்களாக மாறினர்எனப் பேரா சிரியர் இந்திரபாலா கூறுகிறார்.

இங்கே நாகபடு வான் என்ற பெயரே நாகத்தைக் குலமரபா கக் கொண்ட மக்கள் வாழ்ந்ததன் அடையாளம் என கலாநிதி இரகு பதி ஆதாரம் காட் டுகிறார்.



பேராசிரியர்
ப. புஸ்பரட்ணம்
தொல்லியல் இணைப்பாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

படுவம், படுவான் என்பது பழைமையான தமிழ்ச்சொல். இது சங்க இலக் கியத்தில் ஆழமான குளம், பெரியகுளம் என்ற பொரு ளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே நாககுளம்என்றபொருளில்அமைந்த இடமே பண்டைய தமிழ்ச் சொல் இவ் வழிபாட்டு மைய த்தை ஒட்டி யதாக உள்ள அழிவ டைந் துள்ள கானாமோட்டைக் குளம் சிறந்த சான்றாக உள் ளது. இதனால் நாகபடுவானில் கண்டு பிடிக்கப்பட்ட வழிபாட்டு மையம் தமிழரின் தொன்மை யான நாட்டு புறத் தெய்வ வழி பாட்டை மட்டு மன்றி தமிழரின் தொன் மையான வரலாற்றையும்





தற்கால நாக வழிபாட்டு ஆல்யம்
(எருவன் கொடிகாமம்)

ருந்து பாம்பு வெளியேறும் வழியென வும்
ட்டு பிற்காலத்தில் பாம்புப் புற்றை நாக

ஊற்றுப்புலம், இரணைமடு, கொடி காமத்தில் எருவன், மானிப்பாய்,

போன்ற அறிஞர்கள் இலங்கை நாகரிகத்திற்கு வித்திட்ட பெருங் கற்

லில் நாகபடுவான் என மருவி யுள்ள தெனக் கூறலாம். இதற்கு

பறைசாற்றும் நம்பகரமான சான்றாகக் கொள்ளத்தக்கது.

## த அதிசிறந்த
## றை விருது

ங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. சீன குவாங்
ண் காட்சியில் வைத்தே இந்த விருது
ந்து இலங்கையின் சுற்றுலாத்துறையின்
ருகின்றது.

ட வடிக்கைகளுக்கு சீன சுற்றுலாத்துறையும்
ன குவாங்சோவில் கடந்த சர்வதேச பயணம்
ிவிக்கப்பட்டுள்ளது. சீனாவில் இடம்பெற்ற இந்த
ா நிறுவனங்களும் கலந்து கொண்டிருந்தமை
(இ-7)

## ிட திறப்புவிழா

பெருந்து தரிப்பிட கட்டடத் திறப்பு விழா நாளை
பறும். சமரபாகு கிராம அலுவலர் கு.சந்திர
வில் இக் கட்டடத்தினை வட மாகாணசபை
ார். இக் கட்டடம் அமரர். திருமதி ரஞ்சன்
ர்களால் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதா
.போ.ச. ஊழியர்கள், கிராம அலுவலர்கள்,
ணடனர். (இ-3-60)

## சட்டமாணித் தெரிவுப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்க ழகத்தி னால் நடத்தப்படும் சட்டமாணிக் கற்கைநெறிக் கான தெரிவுப் பரீட்சை நாளை (05.03.2017) காலை 9.30 மணி தொடக்கம் பி.ப 12.30மணி வரை யாழ்ப்பாண பல்கலைக்கழக மற்றும் இலங் கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந் திய நிலைய பரீட்சை மண்டபங்களில் நடை பெறும். இப்பரீட்சைக்குரிய அனுமதி அட்டை களை www.ou.ac.lk எனும் இணையத்தள முகவரியூடாகப் பெற்று அதனை உறுதிப்ப டுத்திய பின் பரீட்சைக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்வதுடன் பரீட்சார்த்திகள் தங்களது பரீட்சை மண்டபங்களை இலகுவில் சென்ற டையவும் தாமதங்களை தவிர்த்துக் கொள்ள வும் பரீட்சை நேரத்திற்கு ஒரு மணித்தியாலய த்திற்கு முன்னதாகவே சமுகமளிக்கும் படி யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் ப ணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-7)

## அறங்காவலர் சபைத் தெரிவு

யாழ். நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலய மகா சபைக் கூட்டம் அண் மையில் இடம்பெற்றது: இதில் புதிய அறங்கா வலர் சபை தெரிவு செய்யப்பட் டது. தலைவர் – பேராசிரியர் மா. வேத நாதன் (யாழ். பல்கலை. இந்து நாகரி கத்துறைத் தலைவர்), செயலாளர் – நா.யோகநாதன் (ஓய்வு நிலை பெரும்பாக உத்தி யோகத்தர்), பொருளாளர் – இ.பேரின்பநாதன் (வருமான பரிசோதகர் – பிரதேச சபை, மரபு வழி அறங்காவலர்கள்), கா. ஆ.தியாக ராசா (ஓய்வுநிலைஉதவிஅரசாங்கஅதிபர்), பேராசிரியர்கு.நாகேஸ்வரன் (சப்ரகமுவபல்கலைக்கழகம்), கு.சரவணபவானந்தன்(ஓய்வுநிலைகோட்டக்கல்விஅதிகாரி), அறங்காவ லர்கள்– கலாபூஷணம் நா. கோபாலகிருஷ்ணன், சோ. குமர குரு (பிரதேச சபை உத்தியோ கத்தர்கள்), பொ. பத்மநாதன் (ஓய்வு நிலை விவசாய போதனாசிரியர்), க.கனகேஸ் வரன், கு.மகேச ராசா, த.கோகுலராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-3)

## திருட்டு மின்சாரம் பெற்றால் அறிவிக்கவும்

(கொழும்பு)


திருட்டுத்தனமாக மின்சாரம் பெறுவோர் பற்றிய தகவல்கள் இருந்தால், 0112 422 259 அல்லது 1901 அல்லது 1987 ஆகிய இலக்க ங்களுக்கு அழைத்து அறிவிக்குமாறு, பொதுமக் களிடம் கேட்கப்பட்டுள்ளது. திருட்டுத்தனமாக மின்சாரம் பெற்ற 2,617 பேருக்கு எதிராக, கடந்தாண்டில் மாத்திரம், இலங்கை மின்சார சபையின் விசேட புலனாய்வுப் பிரிவு, சட்ட நடவ டிக்கை எடுத்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இவ்வாறு எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள் காரணமாக, இலங்கை மின்சார சபைக்கு 132 மில்லியன் ரூபாய், வருமானமாகக் கிடைக்கப் பெற்றுள்ளது. (இ-7)



யா/ கச்சாய் அ.த.க. பாடசாலையில் இரண்டாவது பாராளுமன்றத் தேர்தல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

# இலங்கை விமானப்படையின் 66வது ஆண்டு நிறைவு விழா



(கொழும்பு)

இலங்கை விமானப்படையின் 66 வது ஆண்டு நிறைவின் பிரதான அணிவகுப்பு மரியாதை நிகழ்வு விமானப் படைத்தளபதி எயார் மார்ஷல் கபில ஜயம்பதி தலைமையில் நடைபெற்றது.


விமானப்படை தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த வருடாந்த நிறைவு தினத்தையொட்டி நாடு முழுவதிலும் உள்ள விமானப்படைத் தளங்களில் பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் இலங்கை விமானப்படை முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள், படை அதிகாரிகள், விமானப்படை வீரர்கள், சிவில் ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இலங்கை விமானப்படையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மூன்று நாட்களைக் கொண்ட விஷேட கண்காட்சி நிகழ்வு ஒன்று நேற்று முன்தினம் முதல் 4 மற்றும் 5ஆம் திகதிகளில் ரத்மலான விமானப் படைத்தளத்தில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியில் விமான சாகசங்கள், பரசூட் சாகசங்கள், தாக்குதல் நடவடிக்கைகளின் நகல் நிகழ்வுகள், கலாசார மற்றும் இசை நிகழ்வுகள் உள்ளிட்ட பல்வேறு நவரச நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (இ-7)

# யார் செய்தாலும் தவறு சூழலைப் பாதுகாக்க ஒன்றிணையுங்கள் ரஞ்சன் அறைகூவல்



கட்சி பேதங்களை மறந்து சூழலை பாதுகாக்க ஒன்றிணையுமாறு பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யார் செய்தாலும் தவறு தவறுதான் என தெரிவித்துள்ள ரஞ்சன் ராமநாயக்க, மண்ணுடன் தொடர்புபடுத்தி இந்திக அநுருத்தவின் படத்தையும், காட்டுடன் தொடர்புபடுத்தி அமைச்சர் றிசாத் பதியுதீனின் படத்தையும் இணைத்து, இருவரும் சூழலை அழிப்பவர்கள் இல்லையா? எனக் கேள்வியொன்றையும் எழுப்பியுள்ளார்.

பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் இந்த அறிவிப்பு வெளியிடப் பட்டுள்ளது. (இ-7)

# 30 அடி பள்ளத்தில் பாய்ந்த லொறி

கொழும்பு - ஹற்றன் பிரதான வீதியின் வட்டவளை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வட்டவளையிலிருந்து ஹற்றன் நோக்கி வந்த சிறிய ரக லொறி நேற்றுக் காலை 9.30 மணியளவில் குயில்வத்தை பகுதியில் 30 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்தில் காயமுற்ற சாரதியும் மற்றொருவரும் வட்டவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அதிக வேகமாக எதிரே வந்த வாகனத்திற்கு இடம் கொடுக்க முற்பட்ட போதே விபத்து சம்பவித்துள்ளதாகவும், மேலதிக விசாரணை தொடர்வதாகவும் வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# புதையல் தோண்டிய இருவர் கைதாகினர்

(கொழும்பு)

கலேவலை பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கலேவலை பொலிஸார் இவர்களை கைது செய்துள்ளனர்.

இதேவேளை, சந்தேக நபர்களிடமிருந்து நவீன கல் உடைக்கும் இயந்திரமொன்றும் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கடலில் குதித்த எம்.பிக்கள்

(கொழும்பு)

மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடலில் இறங்கி கடலுக்குள் சுழியோடியுள்ளனர்.

இதுவரை தரையில் தகவல்களை தேடி வந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கற்பிட்டி கடலில் குதித்து அங்குள்ள பவளப்பாறைகள் அழிந்துள்ள விதம் குறித்து நேற்று முன்தினம் நேரில் கண்டறிந்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹெக்டர் ஹப்புஹாமி, அசோக பியந்த மற்றும் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சனத் நிஷாந்த ஆகியோரே இவ்வாறு கடலில் சுழியோடியுள்ளனர்.

தடை செய்யப்பட்ட மீன் பிடி உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு மீன்பிடிக்கப்படுவதால், கடலில் உள்ள பவளப்பாறைகள் அழிந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக கடலில் உள்ள மீன் வளங்கள் குறைந்து வருவதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், பவளப் பாறைகளின் நிலைமை குறித்து அறிய இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடலில் மூழ்கி சுழியோடி, அழிவடைந்த பகுதிகளை பார்வையிட்டுள்ளனர். (இ-7)

# இந்திய புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

நுண்கலைத்துறையில் டிப்ளோமா/ இளமாணிப் பட்டப்படிப்புக்கான (சங்கீதம், நடனம், ஓவியம்) இந்திய புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பம் டில்லியிலுள்ள கலாசார உறவுகளுக்கான இந்தியப் பேரவையால் கோரப் பட்டுள்ளது. விண்ணப்பதாரிகளின் வயது 20 முதல் 25 இற்கு இடையில்இருக்க வேண்டும். அத்துடன் விண்ணப்பிக்கும் பாடத்திற்கு (சங்கீதம், நடனம், ஓவியம்) க.பொ.த உயர்தரத்தில் "B" தர சித்தி உட்பட மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் க.பொ.த சாதாரண தரத்திலும் உயர் தரத்திலும் ஆங்கிலப்பாடத்திற்கு சாதாரண சித்தி பெற்றிருக்க வேண்டும்.

ஆரம்பத்தில் ஒரு வருடத்திற்கு வழங்கப்படும் புலமைப் பரிசிலானது மாணவர்களின் சிறந்த பெறுபேறுகள் உறுதிப்படுத்தப்பட்டால் மேலும் இரண்டு வருடங்களுக்கு நீட்டிக்கப்படும்.

விண்ணப்பப் படிவத்தை இல.14,மருதடி ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள இந் தியத் துணைத்தூதரகத்தில் மார்ச் மாதம் 7ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை காலை 9.30 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை வார நாட்களில் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்பப் படிவத்தை http://www.iccrindia.net/scholarshipschemes.html எனும் இணைய முகவரியிலும் விண்ணப்பதாரிகள் பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை மார்ச் 24 ஆம் திகதி அன்று இல. 14,மருதடி ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள இந்தியத் துணைத் துாதரகத்தில் காலை 9.30 - பி.ப ஒரு மணிக்கிடையில் சமர்ப்பிக்க வேண்டும்.

1. சரிபார்த்தல் பட்டியல் மற்றும் தூதரக சான்றிதழ் உட்பட புலமைப்பரிசில் விண்ணப்பப்படிவம்- 2017-18 (ஆறு தொகுதிகள்)

2. உடல் உறுதிப்பாடு-சுகாதாரப் பரிசோதனை படிவம் (ஆறு தொகுதிகள்)

3. விண்ணப்பதாரிகளுக்கான பொது அறிவுறுத்தல்கள்

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களும் (ஆறு தொகுதி) துணையாக இறுவெட்டுக்களும் ஏழு புகைப்படங்களும் மேற்குறிப்பிட்ட முகவரியில் மார்ச் 24ம் திகதி ஆம் திகதியளவில் முற்பகல் 10 மணிக்கும் ஒரு மணிக்குமிடையில் நேரில் கையளிக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரிகள் தமது சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை விண்ணப்பங்களைக் கையளிக்கும் போது கொண்டு வருதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரக தொலைபேசி இல. 021 222 0504 இல் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
சபாரத்தினம்
பொன்னம்பலம்



தோற்றம்
01
12
1942

மறைவு
15
03
2016

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி 05.03.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று அன்னார் வசித்த வல்வெட்டித்துறை, தீருவில் இல்லத்தில் நடைபெறும். அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-7715)

தீருவில்,
வல்வெட்டித்துறை.

தகவல்:-
குடும்பத்தினர் (மனைவி, பிள்ளைகள்)

# முதுகெலும்பு இல்லாதவர்களுடன் நான் இணைந்து பயணிக்க முடியாது

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

முதுகெலும்பு இல்லாதவர்களுடன் சேர்ந்து அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு தான் தயாரில்லையென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இன்று சக்தியுடன் உள்ளது என்பதன் அர்த்தம், அரசாங்கத்தில் இக்கட்சியின் கொள்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்திக் கொண்டு நாளைக்காக தயாராதல் என்பதன் கருத்து, எதிர்வரும் நாட்களில் ஸ்ரீ ல.சு.கயின் அரசாங்கத்தை அமைக்க தயாராவதாகும். கட்சியின் கொள்கைக்கு வெளியில் சென்று செயற்படுவதற்கு ஒருபோதும் எம்மால் முடியாது எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-7)

# விஜித தேரரின் புதிய கட்சி ஆரம்பம்

“தேசிய நல்லிணக்க முன்னணி” எனும் பெயரில் “வாளி” சின்னத்தில் புதிய அரசியல் கட்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தேசிய நல்லிணக்க முன்னணியின் தலைவரும் செயலாளருமான வட்டரக்க விஜித தேரர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கட்சி தற்பொழுது தேர்தல்கள் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு விண்ணப்பித்துள்ளது எனவும் பதிவு செய்யப்பட்டதும் கட்சியின் கொள்கைகளும் திட்டங்களும் மக்கள் முன் வைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இன, மத, மொழி, பேதங்களின்றி நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதே தமது நோக்கம் எனவும் அவர் தெரிவித்தார்.

இக்கட்சியின் முக்கிய பதிவுகளுக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஐ.எம்.இல்யாஸ், சங்கரன் ஆகியோர் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மாசற்ற அரசியல் செயற்பாடு; 13 இல் ஆரம்பம்

மார்ச் 12 இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள “மாசற்ற அரசியல் செயற்பாடு” எனும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் அங்குராப்பண வைபவம் எதிர்வரும் 13ஆம் திகதி 9.30 மணிக்கு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளதாக அவ்வியக்கத்தின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக ஊடகங்களுக்கு அறுவுறுத்தும் ஊடகவியலாளர் மாநாடு, கொழும்பு ரேனுகா ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்றபோது அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

நாட்டுப் பிரஜைகளின் வகிபங்கை வலுவாக்கி, சாதுரியமான வாக்காளரை உருவாக்குவதற்குத் தன்னை அர்ப்பணித்துத் தகுதியான வர்களுக்கு மட்டும் வேட்புமனுக்கள் வழங்கவுமென, அரசியல் கட்சிகளை வலியுறுத்தி, நாடளாவிய ரீதியில் இந் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஒழுக்கமற்றவர்கள், மக்களுக்குப் பணம் அல்லது பொருள் கொடுத்து வாக்குகளைப் பெறுபவர்கள், கடந்த காலத்தில் இலஞ்சம், ஊழல், அரச சொத்துக்களைக் கையாடல் மற்றும் குற்றமிழைத்தவர்களை, எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில், அரசியல் கட்சிகள் வாக்குக் கேட்பதற்கு நியமித்தால் அதனைப் பொது மக்கள் எதிர்க்க வேண்டும்.

சிறந்த சிந்தனையாளர்கள், மக்களுக்காக மக்களோடு சேர்ந்து சேவை செய்யும் பிரதிநிதிகளையே தெரிவு செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கைவிலங்கிடப்பட்ட சந்தேகநபர்களை பாதுகாக்க அரசால் முடியவில்லையாம்

## ஞானசார தேரர் கூறுகிறார்



(கொழும்பு)

கைவிலங்கிடப்பட்டுள்ள சந்தேக நபர்களை பாதுகாப்பதற்குக் கூட அரசாங்கத்தினால் முடியவில்லை என பொதுபல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கைவிலங்கு இடப்பட்ட சந்தேக நபர்களின் உயிர்களைப் பாதுகாக்க முடியாத அரசாங்கம் எவ்வாறு தேசிய பாதுகாப்பினை உறுதி செய்யும்?

தேசிய பாதுகாப்பிற்கு எவ்வித அச்சுறுத்தலும் கிடையாது என அரசாங்கம் ஊடகங்களின் முன்னிலையில் பிரசாரம் செய்கின்றது.

எனினும் உண்மை எது என்பது தற்போது நிரூபணமாகியுள்ளது.

நாட்டை ஆட்சி செய்வது நல்லாட்சி அரசாங்கமா? அல்லது மறைந்து போயிருந்து மீளவும் தலைதூக்கியுள்ள பாதாள உலகக் குழுவினரா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி பீடம் ஏறும் சகல சந்தர்ப்பங்களிலும் நாட்டில் பாதாள உலகக்குழுச் செயற்பாடுகள் அதிகரிக்கின்றன.

இம்முறையும் அதே நிலைமை உருவாகியுள்ளது.

பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் தேசிய அமைப்புக்களுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டு வரும் எமக்கு எதிராகவும் பாதாள உலகக் குழுவினரைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய சாத்தியமுண்டு என ஞானசார தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## நுழைவதற்கென்று ஒரு நேரம்

பெரும்பாலானவர்கள் தங்கள் சௌகரியங்களை அனுசரித்தே பிறரைப் பார்க்க செல்கிறார்கள்.

நேரங்கெட்ட நேரத்தில் ஒரு வீட்டிற்குச் செல்கிறோமே; தொழில் நேரத்தில் பேச்சுக் கொடுத்து காரியத்தைக் கெடுக்கிறோமே என்று பலர் உணரத் தவறி விடுகிறார்கள்.

கணவரை அலுவலகத்துக்கு அனுப்புவதில் முனைந்துள்ள ஒரு பெண்மணி தன் தோழியிடம் எப்படி ஆறஅமர பேசிக் கொண்டிருக்க முடியும்? அப்போது வந்து உட்கார்ந்து கொண்டு சரிவரக் கவனிக்கவில்லை என்று தோழி புகார்.

அல்லது ‘‘இவரை அனுப்புற நேரத்தில் வந்து தொணதொண என்று பேசியதில் ஒண்ணுமே புரியலை. தயிர் சாதத்துக்கு ஊறுகாய் வைக்க மறந்திட்டேன். பாவம் எப்படிச் சாப்பிடப் போறாரோ?’’ என்று அந்த அம்மாள் புகார்.

மாலைக் காட்சி பார்த்து விட்டு 10 மணிக்கு மேல் நண்பர் வீட்டில் நுழைபவர்கள் உண்டு.

கேட்டால் ‘‘இந்தப் பக்கமாகப் போனேன். லைற் எரிஞ்சது. அதுதான் எட்டிப் பார்த்துட்டு போகலாம்னு வந்தேன்’’ என்பார்கள்.

கோலில் படுத்திருக்கும் வயதுக்கு வந்த பெண்கள் படுக்கைகளை வாரிச் சுருட்டிக் கொண்டு ஓடுவார்கள். பார்க்கப் பரிதாபமாக இருக்கும்.

இந்த மனிதருக்கு அதைப்பற்றி எல்லாம் என்ன கவலை?

ஜானகி அணி – ஜெயலலிதா அணி என்பார். இரவு பத்தரைக்கு வீட்டில் இருப்பவருக்கு பற்றிக் கொண்டு வரும். ஆனாலும் வெளியே காட்டிக் கொள்ள மாட்டார்– பண்பு கருதி.

அலுவலகத்தில் முற்பகல் 10 மணி. அதிகாரி அப்போதுதான் நுழைந்து உட்கார்ந்திருப்பார்.

அவருக்கு செட்டில் ஆக 10 நிமிடமாவது ஆகும்.

அந்த 10 நிமிடம்தான் அவகாசம். அப்புறம் இயந்திரகதிதான்.

அந்த 10 நிமிடத்தைக் கூட அவர் தனக்கு ஒதுக்கிக்கொள்ள முடியாதபடி சேர், என்ன சேர் என் விடயத்தை கவனிக்கவே மாட்டேங்குறீங்க? என்பார் ஒருவர்.

அவர் தன் இருக்கையில் உட்கார முன்பே!

நம்மை எல்லாருமே உபசரிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள்.

என்றாலும்கூட அது நேரங்கெட்ட நேரத்தில் சாத்தியமல்ல.

காலையில் 7 மணிக்கு பிறகு, இரவு 10 மணிக்கு முன். இவையே பிறர் இல்லத்தில் நுழையத் தக்க தருணங்கள்.


மதியம் சாப்பாட்டு நேரம் முதல் மாலை 4 மணிவரைகூட நுழைவது விரும்பத்தக்கதல்ல. பலருக்கு இது பகல் தூக்க நேரம்.

நமக்கு எவ்வளவோ அவதி இருக்கலாம். அதற்காக அதை மற்றவர்கள் மீது திணிப்பது தவறு. நமக்கு எவ்வளவோ அவகாசம் இருக்கலாம். அதற்காக மற்றவர்களின் வேலைகளைக் கெடுப்பது சரியல்ல.

வேறு வழியே இல்லாமல் நேரம் கெட்ட நேரத்தில் நுழைய நேரிட்டால் அதற்காக சிறிதேனும் வருந்துவதாக குறிப்பிட வேண்டும். இதையும் செய்யாமல் கவனிப்புச் சரியில்லை, காரியம் ஆகவில்லை என்று புலம்புவது அர்த்தமற்றது.

**லேனா தமிழ்வாணன்**

# ஈழத்துக் காந்தி பொன்னம்பலம் கந்தையா



ஈழத்து வடக்கே அமைந்துள்ள யாழ்ப்பாண மாவட்டத்தின் வடபால் அமைந்த நெய்தலும் மருதமும் சூழ்ந்து செந்நெல்லும் கரும்பும் தெங்கும் விளைகின்ற சைவமும் தமிழும் தழைத்தோங்கும் பழம் பெரும் பதியாம் மாதகல். இக் கிராமத்தில் வாழ்ந்த ஆறுமுகம் பொன்னம்பலத்திற்கும் நன்னிப்பிள்ளைக்கும் 2 ஆவது மகனாக 19.12.1918 இல் பிறந்தவர்தான் அமரர் கந்தையா.

இவரின் சகோதரர்களாக செல்லையா, தில்லைநாதன், சின்னப் பிள்ளை ஆகியோரும் ஆவர்.

கந்தையா தன்னுடைய ஆரம்பக்கல்வியை மாதகல் நுணசை அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் தொடங்கி 5 ஆம் வகுப்பு வரை அங்கு கல்வி பயின்றார்.

பின்பு மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் 7 ஆம் வகுப்புவரை கல்வி கற்றார். அதன் பின்பு பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயத்தில் கற்று மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கல்வி பயின்றார்.

இங்கு தமிழ் பேரறிஞரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய பண்டிதர் க.பொ.இரத்தினம் தலைமை ஆசிரியராக இருந்தார்.

கந்தையாவின் கல்விச் செயற்பாடுகளையும் நல்லொழுக்கத்தையும் அவதானித்த இவர் அவரிடம் அன்பும் பரிவும் காட்டி அவரின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கினார்.

இங்கு அமரர் சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சை மூன்று பகுதிகளிலும் சித்தியடைந்ததால் தலைமை ஆசிரியரினால் அப் பாடசாலையிலேயே தற்காலிக உதவி ஆசிரியராக சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

தலைமை ஆசிரியர் க.பொ. இரத்தினத்தின் சிபாரிசின் பேரில் வவுனியாவிலுள்ள கருங்காலிக்குளம் அரசினர் பாடசாலையில் நிரந்தர ஆசிரிய நியமனம் கிடைத்தது. 19 வயதில் ஆசிரியராக கடைமையை ஆரம்பித்தார்.

அதன் பின்னர் ஏறாவூர் அரசினர் பாடசாலை, பெரிய கிண்ணி அரசினர் பாடசாலை, தாமரை வில்லில் புதிய அரசினர் பாடசாலை, திரியாய் அரசினர் பாடசாலை, நுவரெலியா பல்லேகல அரசினர் பாடசாலை என்பவற்றில் 10 வருடங்களாக கடமையாற்றி அதற்கு மேல் அரச சேவையிலிருந்து விலகுவதாக கல்வித் திணைக்களத்திற்கு அறிவித்து விலகிக் கொண்டார்.

அரச சேவையிலிருந்து விலகிய அவரை திருகோணமலையில் அன்று கல்வி அதிகாரியாக இருந்த சந்திரசேகரம் அப்போது இராமகிருஷ்ணமிஷன் தலைவராக இருந்த சுவாமி நடராஜானந்தாவிடம் அழைத்துச் சென்று கதைத்து கொக்குவில் இராமகிருஷ்ண மிஷனில் ஆசிரியராக நியமனம் பெற்றுக் கொடுத்தார்.

பின்னர் தம்பலகாமம் இ.கி.மி. கோணேஸ்வரா வித்தியாலயம், திருகோணமலை புனிதவளனார் பாடசாலையிலும் ஆசிரியராக பணியாற்றி 25 வருட ஆசிரிய சேவையின் பின்னர் தனது 43 ஆவது வயதில் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

"தன் கடன் அடியேனைத் தாங்குதல் என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் வாக்கிற்கு அமைய ஓய்வு பெற்றதிலிருந்து 99 வயதில் அமரராகும் வரை அதனை மெய்ப்பிக்கும் வகையில் பணி செய்வதையே கடனாகக் கொண்டு வாழ்ந்தார்.

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் படிக்கும் போது அவரது நண்பர் பெருமையினர் மகாத்மா காந்தியின் சுயசரிதையான சத்திய சோதனை என்னும் நூலைப் படிக்கும்படி கொடுத்தார். அதைப் பலமுறை வாசித்து காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு அன்றிலிருந்து காந்தியக் கொள்கைகளை இயன்றளவைப் பின்பற்றி வாழ்ந்து காட்டினார். காந்தியடிகள் அரிச்சந்திர நாடகம் பார்த்து உண்மையே பேச வேண்டும் என்ற இலட்சியத்தைக் கடைப்பிடித்தார்.

உயிர் வாழ்வதற்கு உண்ணுவதேயன்றி சுவைபட உண்பதற்காக உயிர் வாழ்வதில்லை என்ற காந்திய தத்துவத்தை உறுதியாகக் கடைப்பிடித்து வந்தார்.

02.04.1949 இல் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தை உருவாக்க உறுதுணையாய் இருந்தார்.

சங்கத்தின் பொருளாளராக தெரிவு செய்யப்பட்டு பல ஆண்டுகளாக கடமையாற்றினார்.

இச்சங்கத்தின் மூலம் உருத்திரபுரம் காந்தி நிலையம், கோணாவில் தொழில் பயிற்சி நிலையம், தருமபுரம் மகளிர் இல்லம் போன்ற நிறுவனங்களைத் தோற்றுவித்து பல சமூகப் பணிகளை ஆற்றும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தார். இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளில் ஆசிரியராக பணிபுரிந்த வேளையில் இராமகிருஷ்ணர், விவேகானந்தர், ரமணர், அரவிந்தர், திருவள்ளுவர், சுப்பிரமணிய பாரதியார், ஒளவையார், இராமலிங்க வள்ளலார் போன்ற இன்னோரன்ன பெரியோர்களின் ஆன்மீக, அறநீதிக் கருத்துக்களை மக்களிடையே பரப்பி அவர்களின் ஆன்மீக மேம்பாட்டை வளர்க்க வேண்டும் என பெரு விருப்பம் கொண்டார்.

ஓய்வுபெற்றதன் பின்னர் இச்சிந்தனைக்கு மெருகூட்டி எல்லா ஆலயத் திருவிழாக்களிலும் ஆன்மீகப் புத்தகங்களைக்கொண்டுசென்று அடக்க விலையில் விற்பனை செய்து பொதுமக்களுக்கு சமய ஆன்மீக அறக்கருத்துக்களைப் பரப்பினர்.

சிறந்த அறிவு நூல்களை வாசித்தும் கட்டுரைகளை யும் எழுதியும் மக்களிடையே எழுச்சியையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வந்தார்.

அமரர் அவர்களுக்கு கிடைத்த பட்டங்களும் பாராட்டுக்களும் ஏராளம்.

ஒருசிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றேன். தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தால் வழங் கப்பட்ட "சிவத்தமிழ் விருது" திருகோணமலை ஆளுநர் விருது, திருகோணமலை "நகர முதல்வர்" போன்ற விருதுகளும் சிரத்தாரத்தினம், சமய, சமூக காவலன், காந்தீயச்சுடர், இறைபணிச் செம்மல், மூதறிஞர், திருமலையின் வாழ்நாள் சமூக,சமய சாதனையாளருக்கான பட்டம் போன்றவை இவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டன.


அன்னாரின் மறைவுச் செய்தி என்னை மீளாத் துயரில் ஆழ்த்தியது.

பிறப்பும் இறப்பும் நிச்சயம் எனத் தெரிந்தும் ஒரு சிலரின் இறப்பை என்னால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அளவையூர்
வைத்தியலிங்கம்
பாலகிருஷ்ணன்
சைவப் புலவர்,
பண்டிதர்.

# வடமாகாணத்துக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கவேண்டும் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவிப்பு



வடக்கு மாகாணத்துக்கு காணி,பொலிஸ் அதிகா ரங்கள் வழங்கப்படுதல் அவசியம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசிய பேரவையின் நிகழ்வில் உரையாற்றும்போது அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

புதிய அரசியலமைப்பின் மூலம் தேசிய இனப் பிரச்சினையை தீர்க்கலாம் என்று பலரும் கூறுகின்ற நிலையில், இதனை தாம் ஏற்றுக்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு மக்களுக்கு காணியும் பொலிஸ் அதிகாரமும் வழங்கப்பட வேண்டும் என்பதே தமது நோக்கமென குறிப்பிட்ட ரத்ன தேரர், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வடக்கு மாகாணத்துக்கு பகிரப்படும்போது படையினரின் அதிகாரம் மத்திய அரசாங்கத்தின்கீழ் வைக்கப்பட வேண்டுமென வலியுறுத்தினார்.

அத்தோடு படையினரை எந்த தருணத்திலும் வடக்குக்கு அனுப்பக்கூடிய நிலை உருவாக்கப்பட வேண்டும் என்றும் ரத்ன தேரர் தெரிவித்தார். (இ-7)

# சு.கவுக்கு சமல் ராஜபக்ஷவின் வருகை மகிழ்ச்சியானது-டிலான்




(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் முன்னாள் சபாநாயகரும் மகிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான சமல் ராஜபக்ஷ கலந்து கொண்டுள்ளமையானது கூட்டு எதிர்க் கட்சி எம்முடன் இணைய முடியும் என்ற நம்பிக்கையை தமக்கு ஏற்படுத்தியுள்ளது என இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

ஜனாதிபதி தனது பிரதான பங்காளிக் கட்சியுடன் பச்சை அட்டையைக் காட்டி செயற்பட்டு வருகின்றார்.

அவர் திடீரென சிவப்பு அட்டையைக் காட்டி அரசாங்கத்திலிருந்து நீங்கிக் கொள்ளவும் இடமுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)



இயற்கை விவசாயத்துக்குரிய இடுபொருட்களை உற்பத்தி செய்யும் கிறீன் விஸ்வா என்ற நிறுவனம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சங்கானையில் திறந்து வைக்கப்பட்டது. கனடா நாட்டின் 24 மில்லியன் ரூபா நிதியுதவியில் ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக அமைக்கப்பட்டுள்ள இந்நிறுவனத்தை வடக்கு விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் கனடாவின் இலங்கை அபிவிருத்தித் திட்டத்துக்கான பணிப்பாளர் குளோறியா வைஸ்மன், ஐக்கியநாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் இலங்கைக்கான உதவிப் பணிப்பாளர் இரா.கணேசராஜா, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், பேராசிரியர் கு.மிகுந்தன், விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் மேலதிகப் பணிப்பாளர் எஸ்.ஜே.அரசகேசரி, வலி.மேற்கு பிரதேச செயலர் அ.சோதிநாதன், வலி. தென்மேற்கு பிரதேச செயலர் உ.யசோதா ஆகியோரும் விவசாயிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

# மக்களின் காணிகளை உடன் விடுவிக்க வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா வலியுறுத்து

பொதுமக்களின் காணிகளை மீள வழங்குவதற்கு நடமாடும் சேவை மூலம் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியம் என மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்

ஜனாதிபதியின் வேலைத் திட்டத்தின் கீழ் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் வட மாகாணத்தில் இடம்பெறவுள்ள நடமாடும் சேவைகள் குறித்தான விசேட கூட்டம் கடந்த முதலாம் திகதி அலரி மாளிகையில் இடம்பெற்றது. அதன்போது உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

வடக்கு, கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு பிரச்சினைகளால் அல்லற்படுகின்றனர். பொதுமக்களின் காணிகள் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்டுள்ளது. இந்தக் காணிகளை மீளவும் மக்களிடம் கையளிக்க வேண்டியது அவசியமானதாகும். இதற்கான நடவடிக்கை மிக விரைவில் எடுக்கப்பட வேண்டும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது கஷ்டப்படுகின்றனர். இதனால் அந்த மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடமாடும் சேவைகள் நடத்தப்பட வேண்டும். ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் அதிகூடிய பிரச்சினைகளை உள்ளடக்கிய மாகாணங்களாக வடக்கு, கிழக்குமாகாணங்கள் உள்ளன.

30 வருட கால யுத்தம் காரணமாக காணிப் பிரச்சினை இப்பகுதியில் பெரும் பிரச்சினையாகக் காணப்படுகிறது.

யுத்தத்தினால் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ் உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை. உரிய வகையில் நியமனங்கள் அப்பகுதிக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனால் தற்போது உயர் பதவிகளில் தமிழ் உத்தியோகத்தர்கள் இல்லாத நிலை காணப்படுகிறது.

இதனால் உரிய வகையில் பதவி உயர்வுகளை வழங்கி தமிழ் அதிகாரிகள் பற்றாக்குறையாக உள்ள சூழ்நிலையை இந்த அமைச்சு போக்க வேண்டும். கடந்த ஆட்சிக் காலத்தில் நியமனங்களோ பதவி உயர்வுகளோ உரிய வகையில் வழங்கப்படவில்லை. எனவே எமது அரசாங்கம் இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

வடக்கில்நடமாடும்சேவைகள் நடத்தப்பட்டு அந்த மக்களின் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வுகாண வேண்டும். காணிப் பிரச்சினைகள் தொடர்பாகவும் உடனடி தீர்வுகாணும் வகையில் செயற்பாடுகள் அமைய வேண்டும். வடக்கில் பொதுமக்களின் காணிகள் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்டுள்ளன. இந்தக் காணிகளை மீள வழங்குவதற்கு படைத்தரப்பினர் மறுப்புத் தெரிவித்துள்ளனர். இது சட்டவிரோதமான செயற்பாடாகும். எனவே பொதுமக்களின் காணிகளை மீள வழங்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

பொதுநிர்வாக அமைச்சர் வஜிர அபேவர்த்தனவின் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் வடக்கில் மன்னார், வவுனியா மாவட்டங்களில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் நடமாடும் சேவையினை நடத்துவது என்றும் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான நடமாடும் சேவைகளை மே மாதம் 19 ஆம் திகதிக்கும் 31 ஆம் திகதிக்கும் இடையில் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டதுடன் அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் பொதுநிர்வாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ -9)

## சமகால சர்வதேச விவாதங்கள் விசேட கலந்துரையாடல் களம்

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் இறுதிக் குறிக்கோள் நிலைச் சமுதாயம்: வரலாற்றில் மனித உரிமைகள் என்ற தலைப்பில் சமகால சர்வதேச விவாதங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் களமானது நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இதில் தொடக்கவுரையினைச் ச.தனுஜனும் அறிமுக உரையினை அகிலன் கதிர்காமரும் ஆற்றவுள்ளனர். (இ-3)

## மருதானையில் கடும் வாகன நெரிசல்



மாலபே, சைற்றம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக நேற்று மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி காரணமாக, மருதானை நோக்கிச் செல்லும் வீதிகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள், வைத்தியர்கள் உள்ளிட்ட பெருமளவானவர்கள் இந்த பேரணியில் இணைந்திருந்தனர். (இ-7)

## நூல்கள் வெளியீட்டு விழா

எழு கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் நூல்கள் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை கோப்பாய் பரி கன்னி மரியாள் தேவாலய மண்டபத்தில் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும். எழுத்தாளர் மலரன்னையின் கீறல் சிறுகதை தொகுப்பும் மறையாத சூரியன் நாவல் ஆகிய நூல்கள் வெளியிடப்படவுள்ளன. நூல் வெளியீட்டுரையினை கை. சரவணன் ஆய்வுரையினை மூத்த படைப்பாளி நா.யோகேந்திரநாதன், தொகுப்புரையை த.அஜந்தகுமார் ஆகியோரும் ஏற்புரையினை நூலாசிரியர் மலரன்னையும் நிகழ்த்தவுள்ளனர். இவ்வெளியீட்டு விழாவில் இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு எழு கலை இலக்கிய பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-89)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1004

Search for people, places and things — Nagendram Home


### பிருந்தா





### சங்கர்





### குரு




### பேபி




### பத்மா




### புவி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# எரிவாயு திட்டம் இரத்தாகும் வரை போராட்டம் நிறுத்தப்பட மாட்டாது

## பேச்சுவார்த்தை தோல்வி! நெடுவாசல் மக்கள் உறுதி





(புதுக்கோட்டை)

புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் கிராமத்தில் மத்திய அரசு அறிவித்துள்ள ஐதரோ காபன் (எரிவாயு) திட்டத்திற்கு எதிரான போராட்டம் நேற்று 16ஆவது நாளை எட்டியுள்ளது.

பேராட்டத்தில் 100 கிராமங்களை சேர்ந்த மக்களின் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர். அவர்களுக்கு ஆதரவாக இளைஞர்கள், மாணவர்கள், வர்த்தகர்கள், மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள், திரைத்துறையை சேர்ந்தவர்கள் என அனைவரும் ஆதரவளித்துள்ளனர்.

எரிவாயு திட்டம் தொடர்பாக மத்திய அரசு அளித்த விளக்கத்தை ஏற்க மறுத்த போராட்டக்குழுவை சேர்ந்தவர்கள் ஒருங்கிணைப்பாளர் வேலு தலைமையில் சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியை சந்தித்து இத் திட்டத்தை கைவிடக் கோரினர்.

இதன் போது எரிவாயு திட்டத்திற்கு தமிழக அரசு அனுமதி வழங்காது என்று அறிவித்த போதிலும் மத்திய அரசு எழுத்துபூர்வமாகவும் அதிகாரப்பூர்வமாகவும் இத் திட்டத்தை இரத்து செய்வதாக அறிவித்தால் மட்டுமே போராட்டத்தை கைவிடுவோம் என்று திட்டவட்டமாக தெரிவித்தனர்.

போராட்டம் முடிவுக்கு வரும் என்றிருந்த நிலையில் மீண்டும் தொடர்ந்ததால் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் கணேஷ் ஆலங்குடியில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்தில் அவசர ஆலோசனை நடத்தினார். இதில் பொலிஸ் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பிற மாவட்டங்களில் இருந்து பொலிஸாரை வரவழைக்க மாவட்ட ஆட்சியர் கணேஷ் உத்தரவிட்டார். நெடுவாசல் நிலவரம் குறித்து சப்-மாவட்ட ஆட்சியர் அம்ரித் மூலம் ஆய்வு செய்து அறிக்கை அளிக்குமாறும் அவர் உத்தரவிட்டார்.

பின்னர் புள்ளான்விடுதி அரசு உயர்நிலைப்பள்ளியில் நடந்த மற்றொரு பேச்சுவார்த்தை கூட்டத்தில் போராட்டக் குழுவினர் மற்றும் விவசாயிகளிடம் தமிழக அரசின் நிலைப்பாடு குறித்து மாவட்ட ஆட்சியர் கணேஷ் விளக்கி கூறினார். போராட்டத்தை கைவிடுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதையடுத்து போராட்டக் குழுவினர் தஞ்சை மாவட்டம் பேராவூரணியில் உள்ள தனியார் விடுதியில் ஆலோசனை நடத்தினர்.

இதேபோல் நெடுவாசல் மற்றும் திட்டம் செயற்படுத்தப்படும் கிராம மக்களிடமும் போராட்டக்குழுவினர் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால் திட்டம் இரத்தாகும் வரை போராட்டத்தை விலக்கிக்கொள்ள மாட்டோம் என அவர்களிடம் திட்டவட்டமாக தெரிவித்துவிட்டனர். இதனால் இந்த பேச்சுவார்த்தையும் தோல்வி அடைந்தது.

போராட்டக்குழுவை சேர்ந்தவர்கள் ஒரு பிரிவாகவும், கிராம மக்கள் மற்றொரு பிரிவாகவும் செயற்படுவதாகவும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.


இதேபோல் நெடுவாசலில் இருந்து சுமார் 8 கி.மீ. தொலைவில் உள்ள கோட்டைக்காடு, நல்லாண்டார் கோவில் ஆகிய கிராமங்களிலும் பொதுமக்கள் தங்கள் போராட்டத்தை தொடங்கி தீவிரப்படுத்தி உள்ளனர். இதில் திருமயம் தொகுதி எம்.எல்.ஏ. ரகுபதி, முன்னாள் எம்.எல்.ஏ. ராஜசேகரன், முன்னாள் அமைச்சர் சந்திரசேகரன் மற்றும் ஏராளமான கிராமங்களை சேர்ந்த பொது மக்களும் கலந்து கொண்டனர்.

அப்போது அவர்கள் கூறுகையில், நெடுவாசலை விட கோட்டைக்காடு, நல்லாண்டார்கொல்லை கிராமங்களில் தான் சுமார் 11 ஆயிரம் அடி ஆழத்தில் ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தினர் ஆழ்துளை கிணறு அமைத்துள்ளனர். இதனால் எங்களுக்குத்தான் பாதிப்பு அதிகம்.

எனவே நெடுவாசல் கிராம மக்கள் போராட்டத்தை கைவிட்டாலும் மத்திய அரசு ஐதரோகாபன் திட்டத்தை கைவிடும் வரை போராட்டம் தொடரும் என்று தெரிவித்தனர்.

நெடுவாசல் மற்றும் போராட்டம் நடந்து வரும் நல்லாண்டார்கொல்லை, கோட்டைக்காடு, கருக்காகுறிச்சி ஆகிய கிராமங்களில் அதிக அளவிலான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (இ-12)

## இருதரப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்த அமெரிக்காவும் சீனாவும் இணக்கம்




(வோஷிங்டன்)

பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்களில் ஒத்துழைப்பை விரிவுபடுத்தும் வகையில், அனைத்து மட்டத்திலான உரையாடல்கள் மற்றும் கருத்துப் பரிமாற்றங்களை மேம்படுத்த சீனாவும் அமெரிக்காவும் இணக்கம் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள சீன சிரேஷ்ட இராஜதந்திரி யெங் ஜெய்ச்சீக்கும், அமெரிக்க இராஜாங்க செயலாளர் ரெக்ஸ் டில்லர்சனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இருநாட்டு ஜனாதிபதிகளுக்கு இடையிலான தொலைபேசி கலந்துரையாடலின் போது, சீன- அமெரிக்க உறவினை மேம்படுத்தற்கான கூட்டு முயற்சிகளை மேற்கொள்வது தொடர்பில் விவாதிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய தற்போது அனைத்து மட்டத்திலான கருத்து பரிமாற்றங்களை மேம்படுத்துவதற்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளமையானது சீன-அமெரிக்க உறவின் நீடித்த நிலையான மற்றும் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும் என எதிர்பார்ப்பதாக சீன சிரேஷ்ட இராஜதந்திரி தெரிவித்துள்ளார். மேலும், இச் செயற்பாடானது இரு நாடுகளுக்கு மாத்திரமின்றி உலக நாடுகளுக்கும் நன்மை பயப்பதாக அமையும் என்றும் தெரிவித்தார். (இ-12)

## ஜெயலலிதா மரணத்திற்கு காரணமானவர்களை நெருங்கிவிட்டோம்-ஓ.பி.எஸ்.அணி அறிவிப்பு





தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணத்திற்கு காரணமானவர்களை நெருங்கி விட்டதாக ஓ.பி.எஸ் ஆதரவாளரும் முன்னாள் சபாநாயருமான பி.எச். பாண்டியன் தெரிவித்துள்ளார்.

அப்பலோ வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஜெயலலிதா 75 நாட்கள் சிகிச்சையின் பின்னர் கடந்த 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி உயிரிழந்தார். அவருடைய மரணத்தில் மர்மங்கள் நிறைந்திருப்பதாகவும் அது குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்றும் பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை செய்தியாளர்களை சந்தித்த பி.எச் பாண்டியன், ஜெயலலிதாவுக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட இறுதி நாட்களில் அவருடைய உடலில் பொருத்தப்பட்டிருந்த மருத்துவ உபகரணங்கள் எதற்காக அகற்றப்பட்டன? இந்த உபகரணங்களை அகற்றி ஜெயலலிதாவின் மூச்சை நிறுத்த சொன்னது யார்? அதற்கான அதிகாரத்தை அவர்களுக்கு கொடுத்தது யார்? என்று பல்வேறு கேள்விகளை தொடுத்துள்ளார்.

மேலும், 'ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் குறித்து இதுவரை எவ்வித அறிக்கையும் வெளியாகவில்லை. நீதி விசாரணை நடத்தினால் மாத்திரமே ஜெயலலிதா மரணத்தில் உள்ள மர்மம் விலகும். ஜெயலலிதாவின் மரணத்திற்குக் காரணமான குற்றவாளிகளை நாம் நெருங்கிவிட்டோம் என்றும் கூறியுள்ளார். (இ-12)

# சர்வதேச தீவிரவாதத்திற்கு மையப்புள்ளி பாகிஸ்தானே

## ஐ.நாவில் இந்தியா குற்றச்சாட்டு

(ஜெனிவர்)

**சர்வதேச தீவிரவாதத்திற்கு மையப்புள்ளியாக பாகிஸ்தான் விளங்குவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இந்தியா குற்றஞ்சாட்டியுள்ளது.**




ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்றுள்ள இந்திய தூதுவர் அஜித்குமார் மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "எல்லை தாண்டிய தீவிரவாதத்தை ஆதரித்தும் தீவிரவாதிகளை ஊடுருவச் செய்தும், காஷ்மீரில் நிலவும் அமைதியான சூழ்நிலையை பாகிஸ்தான் சீர்குலைக்கின்றது.

அதுமட்டுமன்றி வன்முறையை தூண்டிவிட்டு தீவிரவாதத்திற்கு ஆதரவு அளிக்கின்றது.

காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி. யாரும் இதில் தலையிட முடியாது.


பாகிஸ்தானால் உருவாக்கப்பட்ட கலவரத்தால் பாதிக்கப்பட்ட ஜம்மு காஷ்மீரில், அமைதியை நிலைநாட்ட, இந்திய அரசும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜம்மு காஷ்மீர் மாநில அரசும் நடவடிக்கை எடுக்கின்றன.

தீவிரவாதம் என்பது மிகவும் மோசமான மனித உரிமை மீறல் ஆகும். தீவிரவாதத்திற்கு மையப்புள்ளியாக விளங்கும் பாகிஸ்தான் தற்போது மனித உரிமைகள் குறித்து பேசுகின்றது.

இந்தியாவுக்கு எதிராக தீவிரவாத அமைப்புகளை பாகிஸ்தான் உருவாக்கி தற்போது அவதிப்பட்டு வருகின்றது" என்றும் தெரிவித்துள்ளார். (இ-12)

## கிம் ஜாங் நாம் கொலை வழக்கில் வடகொரிய சந்தேகநபர் விடுதலை

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் சகோதரர் கிம் ஜாங் நாமின் கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட வட கொரிய நபரான ரி ஜாங் சொல் என்பவரை மலேசிய பொலிஸார் விடுதலை செய்துள்ளனர்.




குறித்த நபர் குற்றவாளி என்பதை நிரூபிப்பதற்கு போதுமான ஆதாரங்கள் இல்லை என்று தெரிவித்துள்ள மலேசிய அதிகாரிகள் குடிபெயர்வு குற்றங்களின் அடிப்படையில் விரைவில் அவர் நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவார் என்றும் தெரிவித்துள்ளனர்.

வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் ஒன்றுவிட்ட சகோதரரான கிம் ஜாங் நாம் மலேசிய கோலாலம்பூர் விமான நிலை யத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி இனந் தெரியாத நபர்களால் விஷ தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தார்.

உலக நாடுகளால் தடை செய்யப்பட்ட ‘VX’ எனப்படும் கொடிய நச்சு இரசாயனம் பயன்படுத்தியே கிம் ஜாங் நாம் கொல்லப்பட்டதாக பிரேத பரிசோதனையில் கண்டறியப்பட்டது. (இ-12)

## இராணுவப்படைகள் எத்தகைய சூழலையும் சமாளிக்கக்கூடியவை

### இந்.ஜனாதிபதி பிரணாப் தெரிவிப்பு

இரண்டு நாள் சுற்றுப் பயணமாக இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நேற்று முன்தினம் சென்னை வந்தடைந்தார். சென்னை விமான நிலையத்தில் தமிழக ஆளுநர் வித்யாசாகர் ராவ், முதல்வர் எடப்பாடி கே. பழனிச்சாமி, தலைமை செயலாளர் கிரிஜா வைத்தியநாதன் மற்றும் காஞ்சிபுரம் ஆட்சியர் ஆகியோர் ஜனாதிபதியை வரவேற்றனர்.

இதைத்தொடர்ந்து நேற்று காலை தொடங்கிய தாம்பரம் விமானப்படை தள விழாவில் பிரணாப் பங்கேற்றுள்ளார். அவருடன் ஆளுநர் வித்யாசாகர் ராவ் மற்றும் அமைச்சர் ஜெயக்குமார் ஆகியோரும் விழாவில் பங்கேற்றுள்ளனர்.

தாம்பரம் விமானப்படை தள விழாவில் விமானப் படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை பிரணாப் முகர்ஜி ஏற்றுக் கொண்டார். விமானப் படைத்தளத்தில் இயங்கும் தொழில்நுட்ப பிரிவுக்கு தேசிய அங்கீகாரம் அளித்து கௌரவித்தார். இத்துடன் சிறப்பாக பணியாற்றிய வீரர்களுக்கும் விருது வழங்கி கௌரவிக்கிறார் பிரணாப் முகர்ஜி. இதைத் தொடர்ந்து விழாவில் அவர் பேசியதாவது.

தாம்பரம் விமானப்படை தளம் மிகவும் பழைமையானது வரலாற்று சிறப்புமிக்கது. ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் தாம்பரம் விமானப்படை தளம் தான் முதுகெலும்பு. விமானப்படை தொழில்நுட்ப பிரிவிற்கு தேசிய அங்கீகாரம் வழங்கும் தருணம் இது.

நமது விமானப்படை வீரர்களின் சேவையை வெள்ளப் பாதிப்பின் போது பார்த்து தேசமே வியந்தது. பதான் கோட் படைத் தளம் தாக்கப்பட்ட போது நமது வீரர்களின் போர்க்குணம் வியப்புக்குரியது. தாம்பரம் விமானப்படையின் திறன் இப்போது பலமடங்கு உயர்ந்துள்ளது. விமானப்படையின் சேவைக்குதலைவணங்குகிறேன் இந்தியா வலிமையான நாடாக உருவாகி வருகிறது. இந்திய ராணுவப்படைகள் எத்தகைய சூழலையும் சமாளிக்கக்கூடியவை எனத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் உரை நிறைவுற்றதும் பிரணாப் முகர்ஜிக்கு தாம்பரம் விமானப்படை தள தொடி அணி வகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து வானில் விமானப் படை வீரர்களின் சாகசம் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.

## தடை செய்யப்பட்ட இரசாயனம் பயன்படுத்தல் மலேசிய அரசு கடும் கண்டன அறிக்கை



மலேசியாவில் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் சகோதரரை கொல்வதற்காக உலக நாடுகளால் தடை செய்யப்பட்ட கொடிய இரசாயனம் பயன்படுத்தப்பட்ட சம்பவத்துக்கு மலேசிய அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் சகோதரரான கிம் ஜாங் நாம் மலேசிய விமான நிலையத்தில் கடந்த 6-2-2017 அன்று அடையாளம் தெரியாத நபர்களால் படுகொலை செய்யப்பட்டார்.

இந்த கொலை தொடர்பாக இரு பெண்கள் மற்றும் வட கொரியாவை சேர்ந்த ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களிடம் நடத்திய விசாரணையில் கிம் ஜாங் நாமை கொல்ல வட கொரியாவை சேர்ந்த கூலிப்படை மூலம் சதித்திட்டம் தீட்டியது தெரிய வந்தது.

அவரை கொல்வதற்காக உலக நாடுகளால் தடை செய்யப்பட்ட ‘VX’ எனப்படும் கொடிய நச்சு இரசாயனம்பயன் படுத்தப்பட்டது பிரேத பரிசோதனையின் மூலம் கண்டு பிடிக்கப்பட்டது. இந்நிலையில், பயங்கரமான இரசாயனத்தை இந்த படுகொலைக்கு பயன்படுத்தி இருப்பதை மலேசிய அரசு கண்டித்துள்ளது.

இதுதொடர்பாக, மலேசிய அரசு வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில், ‘எவ்விதமான நோக்கத்திலும், எந்த சூழ்நிலையிலும் மக்கள் அதிகமாக நடமாடும் பொது இடங்களில் இதைப் போன்ற அபாயகரமான நச்சு இரசாயனம் பயன்படுத்தப்படுவதை இந்த அரசு வன்மையாக கண்டிக்கிறது.

இதைப்போன்ற ஆபத்தான இரசாயனங்களை மலேசியா தயாரிப்பது கிடையாது. இறக்குமதி செய்து நாங்கள் சேமித்து வைப்பதும் இல்லை. நெதர்லாந்தில் இருக்கும் இரசாயன ஆயுதங்கள் மீதான தடையை கண்காணித்து வரும் அமைப்பிடம் இது, தொடர்பாக ஆண்டுதோறும் முறையான அறிக்கையை மலேசிய அரசு தாக்கல் செய்து வருகிறது’ என குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-12)



# சிறுவர் அரங்கம்

## நரியின் கர்வம்

ஒரு அடர்ந்த காட்டில் கர்வம் பிடித்த நரி ஒன்று வாழ்ந்து வந்தது. அந்த நரி ஒருநாள்காலையில் உணவை தேடி வேட்டைக்கு மேற்கு நோக்கி கிளம்பியது. அப்போது கிழக்கே இருந்து எழுந்த சூரிய ஒளியால் நரியின் நிழல் மிக பெரியதாக தெரிந்தது.

தனது நிழலை பார்த்த நரிக்கு ஒரே சந்தோசம். "நான் ரொம்பப் பெரிய ஆளாக்கும். அதுவும் இந்த காட்டின் ராஜாவாக உள்ள சிங்கத்தை விடவும் பெரியவனாக நான் உள்ளேன் என நினைத்துகொண்டே வேட்டைக்குச் சென்றது.


செல்லும் வழியில் நரி ஒரு சிங்கத்தை கண்டது. சிங்கமோ சற்று முன்னர் தான் ஒரு மானை வேட்டையாடி அதை உண்ட களைப்பில் மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தது.

நரியும் தன்னுடைய நிழல் சிங்கதைவிடவும் பெரியதாக இருபதாக நினைத்துகொண்டு சிங்கம் வரும் வழியில் நடந்து சென்றது. சிங்கமும் உண்ட களைப்பில் இருந்ததால் நரியை ஒன்றும் செய்யாமல் கடந்து சென்றது.

நரிக்கோ ஒரே குஷி. நாம் சிங்கத்தை விடவும் பெரியதாக இருபதனால் சிங்கம் என்னைகண்டு பயந்து சென்றது என நினைத்துகொண்டு அன்று மாலை தன்னுடைய வீட்டிற்க்கு சென்றது.

மாலை வீட்டிற்க்குச் சென்றதும் நரி காட்டில் உள்ள மிருகங்களை எல்லாம் அழைத்தது. அனைத்து மிருகங்களும் நரியின் கூட்டத்திற்கு வருகை புரிந்தன. நரி அனைத்து மிருகங்களிடமும், "இனி மேல் இந்த காட்டிற்கு நான் தான் ராஜா" என்றது.

யானையோ, "இதை நாங்கள் ஏற்க முடியாது என் றது. உடனே நரி காலையில் நடந்த சம்பவத்தைக் கூறி சிங்கமே என்னைக் பார்த்து பயந்து சென்றது" என்றது. கூட்டத்தில் இருந்த மானோ, "சிங்கத்தை உன் முன் மண்டியிடச் சொல் பிறகு உன்னை இந்த காட்டிற்கு ராஜவாக்குகிறோம்" என்றது. அடுத்த நாள் நரி அந்த சிங்கத்தை தேடிச் சென்றது. செல்லும் வழியில் சிங்கம் தன்னுடைய பாதையை நோக்கி வருவதை கண்டு நரி கர்வத்துடன் நின்றது.



சிங்கம்வந்தவுடன்சிங்கத்தை பார்த்து, நரி "என் முன்னாள் மண்டியிட்டுச் செல்" என்று கூறியது. சிங்கமோ மிகவும் கோவத்துடன், தரக்குறைவாக பேசிய நரியை பார்த்து, "உன்னை மன்னித்து விடுகிறேன் உடனே இங்கிருந்து ஓடிவிடு" என்றது.

நரியோ சிங்கம் தன்னை கண்டு பயந்து விட்டது என நினைத்து "முடியாது" என்று பதில் கூறிக்கொண்டே தன்னுடைய நிழலைப் பார்த்தது. அது மதிய நேரம் என்பதால் நரியின் நிழல் உண்மையான அளவில் இருந்தது. அப்பொழுது தான் நரிக்கு புரிந்தது சூரிய ஒளியில் தான் தனுடைய நிழல் பெரியதாக இருந்தது என்று.

இதை பொறுத்துக்கொள்ள முடியாத சிங்கம் நரியை ஒரே அடியினால் கொன்று தின்றது.

தன் நிலை தெரியாமல் தான் என்று கர்வம் கொண்டவனின் நிலை இதுவே.

முற்றும்.

## 03.2017 04 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ◆1275 - சீன வானியலாளர்கள் முழுமையான சூரிய கிரகணத்தை அவதானித்தனர்.
- ◆1351 - சியாமின் மன்னராக ராமாதிபோதி முடி சூடினார்.
- ◆1493 - கடலோடி கொலம்பஸ் அமெரிக்காவுக்கான பயணத்தை முடித்துக் கொண்டு லிஸ்பன் திரும்பினார்.
- ◆1519 - ஹேர்னான் சோர்ட்டேஸ் மெக்சிகோவில் தரையிறங்கினான்.
- ◆1665 - இங்கிலாந்து மன்னன் இரண்டாம் சார்ல்ஸ் நெதர்லாந்து மீது போரை அறிவித்தான்.
- ◆1793 - பிரெஞ்சுப் படைகள் நெதர்லாந்தின் கீர்ட்ரூடென்பேர்க் நகரைக் கைப்பற்றினர்.
- ◆1810 - பிரெஞ்சு இராணுவம் போர்த்துக்கல்லில் இருந்து விரட்டப்பட்டது.
- ◆1813 - நெப்போலியனுடன் போரிட்ட ரஷ்யப் படைகள் ஜேர்மனியின் பேர்லின் நகரை அடைந்தனர். பிரெஞ்சுப் படைகள் எதிர்ப்பேதும் இன்றி நகரை விட்டு வெளியேறினர்.
- ◆1877 - எமிலி பேர்லீனர் மைக்ரோபோனைக் கண்டுபிடித்தார்.
- ◆1877 - பியோத்தர் சாய்க்கொவ்ஸ்கியின் ஸ/பான் லேக் பலே நடனம் மாஸ்கோவில் முதற் தடவையாக மேடையேறியது.
- ◆1882 - பிரித்தானியாவின் முதலாவது மின்சார டிராம் வண்டி கிழக்கு லண்டனில் ஓடவிடப்பட்டது.
- ◆1894 - ஷங்காயில் ஏற்பட்ட பெரும் தீயில் ஆயிரக்கணக்கான கட்டடங்கள் எரிந்து சாம்பலாயின.
- ◆1899 - குயீன்ஸ்லாந்தில் இடம்பெற்ற பெரும் சூறாவளியினால் 300 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- ◆1908 - ஒகைய்யோவில் பாடசாலை ஒன்று தீப்பற்றியதில் 174 பேர் கொல்லப்பட்டனர்.
- ◆1917 - ரஷ்யாவில் பெப்ரவரி புரட்சி வெற்றி பெற்றது.
- ◆1931 - இந்தியாவில் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும் மக்களின் அடிமட்டத்தினர் அனைவரும் உப்பை கட்டுப்பாடு ஏதுமின்றி பயன்படுத்தவும் பிரித்தானியவின் ஆளுநர் எட்வர்ட் வூட் மற்றும் மகாத்மா காந்தி ஆகியோருக்கிடையில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.
- ◆1945 - இரண்டாம் உலகப் போர்: பின்லாந்து நாசி ஜெர்மனி மீது போரைத் தொடுத்தது.
- ◆1945 - எலிசபெத் இளவரசி (பின்னர் மகாராணியானவர்) இராணுவத்தில் வாகனம் செலுத்துனராக இணைந்தார்.
- ◆1959 - ஐக்கிய அமெரிக்காவின் பயனியர் 4 உலகின் இரண்டாவது (அமெரிக்காவின் முதலாவது) செயற்கைக் கோள் ஆனது.
- ◆1977 - ருமேனியா தலைநகர் புகாரெஸ்ட்டில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 1,570 பேர் கொல்லப்பட்டனர்.
- ◆1980 - றொபேட் முகாபே சிம்பாப்வேயின் முதலாவது கறுப்பின பிரதமரானார்.
- ◆1994 - கொலம்பியா 16 விண்ணோடம் ஏவப்பட்டது.
- ◆2001 - லண்டனில் பிபிசி தொலைக்காட்சி நிறுவனத்தின் முன்னால் இடம்பெற்ற பெரும் குண்டுவெடிப்பினால் 11 பேர் காயமடைந்தனர்.
- ◆2001 - போர்த்துக்கலில் பாலம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 70 பேர் கொல்லப்பட்டனர்.
- ◆2006 - பயனியர் 10 விண்கலத்துடன் மேற்கொள்ளப்பட்ட கடைசித் தொடர்பு தோல்வியில் முடிந்தது.
- ◆2006 - அசாம் மாநிலத்தின் பெயர் அசோம் என மாற்றப்பட்டது.

### பிறப்புக்கள்

- ◆1938 - அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியர் (இ. 2006)
- ◆1947 - தெ. நித்தியகீர்த்தி, ஈழத்து, ஆஸ்திரேலிய எழுத்தாளர் (இ. 2009)
- ◆1970 - ச.நித்தியானந்தன் - கவிஞர், ஈழத்து எழுத்தாளர்

### இறப்புக்கள்

- ◆1193 - சலாடீன், துருக்கிய சுல்தான் (பி. 1137)
- ◆1941 - லூட்விக் குயிட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1858)
- ◆1952 - சார்ள்ஸ் ஷெரிங்டன், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1857)
- ◆2005 - கலைச்செல்வன், உயிர்நிழல் ஆசிரியர்

### சிறப்பு நாள்

- ◆இந்திய தேசிய பாதுகாப்பு தினம்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 40 | 50 | 70 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 120 | 80 | 110 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 100 | 120 | 120 | 160 | 160 |
| தக்காளி | 40 | 40 | 40 | 40 | 50 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 70 | 60 | 80 | 80 | 60 |
| கோவா | 30 | 40 | 20 | 30 | 40 | 60 | 40 |
| கரட் | 80 | 60 | 40 | 60 | 50 | 120 | 40 |
| பூசணி | 100 | 60 | 35 | 60 | 60 | 60 | 40 |
| புடோல் | 80 | 60 | 40 | 80 | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 40 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 150 | 100 | 90 | 50 | 120 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 80 | 100 | 100 | 100 | 90 |
| பாகற்காய் | 150 | 160 | 180 | 150 | 120 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 100 | 80 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 50 | 100 | 50 | 60 | 50 | 80 | 60 |
| பயற்றங்காய் | 160 | 150 | 100 | 120 | 100 | 120 | 100 |
| லீக்ஸ | 60 | 60 | 60 | 80 | 60 | 80 | 60 |
| பீற்றூட் | 60 | 50 | 40 | 60 | 50 | 80 | 80 |
| கறிமிளகாய் | 140 | 100 | 90 | 100 | 100 | 160 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 200 | 280 | 600 | 200 |
| போஞ்சி | 120 | 100 | 60 | 80 | 100 | 160 | 80 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 40 | 40 | - | 40 | 60 |
| கீரை-1பிடி | 40 | 40 | 20 | 30 | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 60 | 60 | 50 | 100 | 80 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 20-50 | 60 | 60 | 50-60 | 60 |
| இராசவள்ளி | 180 | 300 | 160 | 200 | 160 | 200 | 140 |
| வெங்காயப்பூ | 50 | 40 | 40 | 40 | 40 | 100 | 40 |
| முள்ளங்கி | 60 | 40 | 30 | 60 | 60 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 15 | 30 | 20 | 20 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | 50 | 60 | 80 | 60 | 60 |

அனுபவம் என்பது ஒரு மனிதனுக்கு என்ன நேரிடுகிறது என்பதல்ல. அதைக் கொண்டு அவன் என்ன செய்கிறான் என்பதுதான். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கைகேயிக்காக இராமரை காடனுப்பிய தசரதன் போலவோ தாங்களும்

மேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கு முதற்கண் வணக்கம்.

ஜனாதிபதியிடம் சொல்லுங்கள்... குறை கேள் அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் திறந்து வைப்பதற்காக இன்று வரும் தங்களை வர வேற்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

அடிப்படையில் தங்களிடம் இருக்கக்கூடிய மனிதநேயத்தை நாம் அறியாதவர்கள் அல்லர். அதிமேதகு என்ற பதத்தை ஜனாதிபதி என்ற பதவிக்கு முன்னால் சேர்க்காதீர்கள்; ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்றே அழையுங்கள் என்று கூறிய தங்களின் எளிமையான வாழ்வியல் நமக்கு நிறையவே விருப்பத்துக்குரியது.

முன்னொரு தடவை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த தாங்கள் முகாம்களில் வாழும் வலி.வடக்கு மக்களை நேரில் சென்று பார்த்தீர்கள். அவர்களுடன் நேரில் கலந்துரையாடினீர்கள். இவையெல்லாம் தங்கள் மீதான மதிப்பை தமிழ் மக்களிடம் உயர்த்திக் கொண்டன.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதிலும் தங்களிடம் இருக்கக்கூடிய திடம் கண்டு ஆறுதலடைகின்றோம்.

எனினும் தங்கள் தொடர்பில் எங்களுக்கு இருக்கக்கூடிய குறையொன்று உண்டு. அதனை ஜனாதிபதியிடம் சொல்லுங்கள் என்ற குறை கேள் அலுவலகத்தை திறப்பு விழாவாகிய இன்றைய நாளில் எமக்கு இருக்கக்கூடிய முதலாவது குறையாக தமிழ் மக்கள் சார்பாக தங்களிடம் சமர்ப்பிக்கின்றோம்.

மேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களே! வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்த யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட சம்பவம் தாங்கள் அறியாததல்ல.

யுத்த காலத்தில் படையினரிடம் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பது இன்று வரை தெரியாமலே உள்ளது.

தவிர, காணாமல்போனவர்கள்; சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் அவலங்கள்; படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் தமிழர்களின் நிலங்கள்; இப்படிப் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வின்றி தமிழ் மக்கள் சதா அழுது கண்ணீர் வடித்த வண்ணமுள்ளனர்.

யுத்த காலத்தில் நடந்த தமிழின அழிப்புத் தொடர்பில் சர்வதேச விசாரணை இடம்பெற வேண்டும். எமக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் உள்ளக்கிடக்கை.

இருந்தும் போர்க்குற்ற விசாரணையில் சர்வதேச நீதிபதிகளுக்கு அறவே இடமில்லை என்று தாங்கள் அடிக்கடி கூறி வருகிறீர்கள். இது எமக்கு மிகுந்த வேதனையையும் துன்பத்தையும் தருகிறது.

மனிதநேயமிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள், ஏன் இப்படியாக நடந்து கொள்கிறார் என்று தமிழ் மக்கள் தமக்குள் கேள்வி எழுப்புகின்றனர்.

வன்னி யுத்தத்தில் நடந்தது தமிழின அழிப்பு என்பதே உண்மை. இதற்கு நீதி கிடைக்க வேண்டுமாயின் எந்தச் சந்தர்ப்பத்திலும் சர்வதேச விசாரணை விலக்கப்படக்கூடியதல்ல. நல்லாட்சியில் இது நடக்கும் என்றே தமிழ் மக்கள் நம்பினர்.

அந்த நம்பிக்கையோடுதான் அவர்களின் வாக்கு உங்களுக்காயிற்று. ஆனால் இப்போது நீங்கள் சர்வதேச நீதிபதிகளை எதிர்க்கிறீர்கள். இது ஏன்? கைகேயிக்காக தன் மகன் இராமனை காட்டுக்கு அனுப்பிய தசரதன் போல நீங்களும் ஆகிவிட்டீர்களா?

தர்மம் தெரிந்த தாங்களும் கைகேயி வழியான மந்தரையின் சூழ்ச்சிக்கு பலியாகி விட்டீர்களா?

மேதகு ஜனாதிபதி அவர்களே! இந்தக் குறையை இன்றைய நாளில் தீர்த்து வைப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு இம்மடலை தங்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

# பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

## அங்கஜன் எம்.பி. நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கின் யாழ்ப்பாணத்தில் தொடங்கி கிழக்கின் திருகோணமலை என விரிவு பட்டுக்கொண்டு வரும் பட்டதாரிகளின் போராட்டம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளருமான அங்கஜன் இராமநாதன் நேற்று ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் நாடளாவிய ரீதியில் பட்டம்முடித்த பட்டதாரிகளுக்கு காலக் கிரமத்தில் வேலைவாய்ப்பினை வழங்குவதென்பது சீரற்ற நிலையிலேயே காணப்படுகின்றது. இதேபோன்ற ஒரு அசாதாரண சூழ்நிலை 2012 ஆம் ஆண்டில் உருவான போது ஸ்ரீலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்கத்தின் அன்றைய தலைவருக்கு அழுத்தமான முறைப்பாடு செய்யப்பட்டபோது அவர் 55ஆயிரம் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புக்களை உருவாக்கினார்.

இன்று யாழ்ப்பாணத்தில் இருந்து வடக்கை பிரதிபலிக்குமுகமாக பட்டதாரிகளினால்சுழற்சிமுறை போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகின்றது. இது கிழக்கிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. பட்டதாரிகளின் இந்த தொடர்ச்சியான வேலையற்ற பிரச்சினையை நான் ஜனாதிபதிக்கு தொடர்ச்சியாக தெரிவித்து வருகின்றேன்.

ஆயினும் இப்போது பட்டதாரிகளினால் முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்தை, அதன் இன்றியமையாத் தன்மையினை இப்போது மீண்டும் நான் ஸ்ரீலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்கத்தின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவின் கவனத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் ஊடாக தெரியப்படுத்தியுள்ளேன்.

நிலைமைகளை புரிந்து கொண்ட ஜனாதிபதி நாடளாவிய ரீதியான பட்டதாரிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய உறுப்பினர்களை இம்மாதம் சந்தித்து காலக்கிரமத்தில் உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறி கலந்துரையாடலுக்குமான திகதியையும் கொடுத்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்கத்தின் பிரதேச ரீதியிலான 10 பேர் கொண்ட குழு ஒன்று காணப் படுகின்றது. இதுவரை காலமும் இல்லாத அளவில் இப்போது யாழ்ப்பாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக அதில் கபிலன் என்னும் பட்டதாரியினையும் அங்கம் வகிக்க செய்துள்ளேன்.

ஸ்ரீலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் என்ற ரீதியிலும் பட்டதாரிகளின் நிலைமையினை நன்கு உணர்ந்தவன் என்ற ரீதியிலும் நான் வடக்கு பட்டதாரிகளின் வேலை வாய்ப்பு மற்றும் நியமனம் பெற்றவர்களின் தர உயர்வு முதலான பல விடயங்களில் தெளிவிலும் தெளிவாக உள்ளேன்.

இம்மாதம் நடைபெறும் ஸ்ரீலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்கத்தின் அமர்வு நிச்சயமாக ஒரு முக்கிய அமர்வாக அமையும். அது நாடளாவிய ரீதியில் பட்டதாரிகளுக்கான நியமனம் தொடர்பான அவர்களது இதர பிரச்சினைகள் தொடர்பான விடயங்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுத்தரும் என நான் அதிகமாகவே நம்புகிறேன்.

இந்த அமர்வின் போது யாழ்.மாவட்ட பட்டதாரிகளின் தேவைகளும் அவசரங்களும் அவசியங்களும் வலுவாக ஒலிக்கும் என நான் யாழ். பட்டதாரிகளுக்கு உறுதி கூறுகின்றேன்.

யாழ்.பட்டதாரிகளினால் இத்தகைய போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் போது அது நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

அது நாடளாவிய பிரச்சினையாக்கப்பட வேண்டும்.

இந்நிலைமை இல்லாமைக்கு கணிசமான அளவு தொடர்பாடல் இல்லாமையே காரணம்.

இதனால் வெகு விரைவில் நாடளாவிய ரீதியில் பட்டதாரிகளை ஒன்றிணைக்கும் தொடர்பாடல் வசதிகளையும் நான் ஏற்படுத்தித் தருவேன் எனவும் உறுதி கூறுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும்தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை யாழ்.பிரதேசத்தில் நெடுந்தீவு பிரதேசம், தோப்பு, அச்சுவேலி ஆஸ்பத்திரி, அச்சுவேலி நகர், பத்த மேனி, கதிரிப்பாய், இடைக்காடு, தம்பாலை, செல்வநாயக புரம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் நாச்சிக்குடா, நாக படுவான், முழங்காவில், குமுழமுனை, பல்லவராயன் கட்டு, வெள்ளாங்குளம், வற்றாப்பளை, முள்ளியவளை, தண்ணீரூற்று, பூதன்வயல், முறிப்பு, தண்ணிமுறிப்பு குமுழமுனை, மாஞ்சோலை வைத்திய சாலை, விமானப்படை-I மற்றும் II,59வது படைப் பிரிவு (14ESR- 01 மற்றும் 14ESR- 02), SFHQ வற்றாப்பளை, 12 VIR, 16 ESR, SLLI கணேஷபுரம் வெள்ளாங்குளம், 651 வது படைப்பிரிவு முகாம், 652 ஆவது படைப்பிரிவு முகாம், 2ஆவது அதிரடிப்படை முகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் ஐஸ் தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**திருநீறு அணிவதற்கான விதிகள் யாவை?**

திருநீறு அணிவதற்கு சில விதிமுறை கள் உள்ளன. திருநீறு தண்ணீரில் குழைத்தும் பொடியாகவும் பூசிக் கொள்வதுண்டு. காலையில் நீரில் குழைத்துப் பூசுகிறார்கள். எல்லோருக்கும் குழைத்துப் பூசுவதற்கு விதியில்லை. மாலை நேரங்களில் பொடியாகப் பூசிக்கொள்கிறார்கள்.




ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனி விதிமுறைகள் உண்டு. நனைந்த திருநீறையும் சந்தனத்தையும் அணிவதனால் உடலின் ஈரத்தன்மை முறைப்படுத்தப்படுகிறது. நோய் அணுக்களைக் கொல்வதற்கான சக்தியும் இவற்றுக்கு உண்டு.

உடலில் உண்டாகும் வீக்கங்களைக் குறைப்பதற்கும் திருநீறு ஒரு சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது.

(தொடரும்)

## சாஸ்திரங்கள்

✦ மதுபானம் தயாரிப்பவன், மதுபான தொழிற்சாலையில் வேலை செய்பவன், விற்பனை செய்பவன், சரக்குகளை வேறிடத்திற்கு எடுத்துச் செல்பவன், பரிமாறுபவன், மதுபானங்கள் விற்று வரும் பணத்தை பயன்படுத்துபவன், ஒருவருக்கு மது வாங்கிக் கொடுப்பவன் ஆகிய அனைத்து சாரார் மீது அல்லாஹ்வின் சாபம் இறங்குகிறது.

-அண்ணல் நபி (ஸல்)

✦ சூரியன், சந்திரன், குரு, சுக்ரன் ஆகிய கிரகங்கள் விஷ்ணு பகவானிடம் அடிமைப்பட்டுக் கிடக்கும் ஸ்தலம் ஸ்ரீரங்கம் என்பதால் இந்த நான்கு கிரகங்களால் தோஷமும் துன்பமும் துயரமும் அடையப் பெற்றவர்கள். இத்தலத்திற்கு தோஷ நிவாரணம் ஆகும் பொருட்டு வந்து உரிய வழிபாடுகள் செய்யின் சகல தோஷ பரிகாரமும் விசேட பலனும் உண்டாகும்.

-ஸ்ரீரங்க மகாத்மியம்

✦ சூரிய பகவான் இத்தலத்தில் மாமரத்தின் கீழிருந்து ஸ்ரீரங்கநாதரை பூஜித்து இஷ்ட சித்தி அடைந்தார். அதேபோல் தட்சப் பிரஜாபதியினால் சந்திரனுக்கு ஏற்பட்ட சாபம் போக்கிய தலம்.

-ஸ்ரீரங்க மகாத்மியம்

✦ குரு பகவானின் மனைவியான தாராதேவியை சந்திரன் இழுத்துச் சென்று சங்கமம் செய்ய அதனால் புதன் பிறந்தான். அந்த தாராதேவியுடன் சகவாசஞ் செய்ததால் உண்டான தோசத்தை நீக்கிக் கொள்ள குருபகவான் ஸ்ரீரங்க தலத்தில் வகுள மரத்தின் கீழிருந்து தவஞ் செய்து தோஷம் நீங்கப் பெற்றார்.

-ஸ்ரீரங்க மகாத்மியம்

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்




❖ எழுந்திருங்கள், உழையுங்கள்- இவ் வாழ்வு எத்தனை நாள், இவ்வுலகில் வந்து விட்டீர்கள். எனவே அதற்கு அறிகுறியாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். அவ்வாறு செய்யாவிடில் உங்களுக்கும் மரங் கள் கற்களுக்கும் என்ன வேறுபாடு? அவையும் தோன்றுகின்றன, கெடுகின்றன, இறக்கின்றன.

❖ தைரியமாக இருங்கள்! எனது குழந்தைகள் எல்லாவற்றிற்கும் மேலாகத் துணிவாயிருக்க வேண்டும். எதற்காகவும் எள்ளளவும் விட்டுக் கொடுத்தல் உதவாது. மிகவுயர்ந்த உண்மைகளைப் பரப்புங்கள், எங்கும் வீசுங்கள். உங்கள் மதிப்பை இழப்பதையோ பிறரை வருத்துவதை எண்ணியோ அஞ்சாதீர்கள். உண்மையைக் கைவிடச் செய்யும் தூண்டுதல்களுக்கு நடுவிலும் அதைக் கைவிடாதிருந்தால் ஒரு தெய்வீக வலிமையை அடைவீர்கள் என்று உறுதி கொள்க.

❖ அவ்வலிமையின் முன்பு நீங்கள் உண்மையென நம்பாதவற்றை பற்றி உங்களிடம் பேசமக்கள் நடுங்குவார்கள். இடையறாது பதினான்கு ஆண்டுகள் உண்மையைக் கடுமையாகக் கடைப்பிடித்து அதிலிருந்து வழுவாமல் உங்களால் இருக்க முடிந்தால் நீங்கள் சொல்வதில் மக்களுக்குநம்பிக்கையும் உறுதியும் எழும்.

# ஒட்டுசுட்டான் பிரதேச செயலக விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டம்

## முத்தையன்கட்டு பாரதி சம்பியன்





(முள்ளியவளை)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களிற்கு இடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின்இறுதிப்போட்டி கடந்த 28 ஆம் திகதி ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இவ்விறுதிப் போட்டியில் முத்தையன்கட்டு பாரதி அணியும் கற்சிலைமடு பண்டாரவன்னியன் அணியும் மோதிக் கொண்டன.

இதில் முதல் பாதியாட்டத்திலேயே இரு அணியினரும் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்று சமநிலையில்இருந்தனர். இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணியினரும் எந்தவொரு கோலினையும் பெறாதமையினால் வெற்றியை தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதன் போது தமக்கு கிடைத்த சந்தர்ப்பங்களில் பண்டார வன்னியன் அணியினர் இரண்டு பந்துகளை கோலாக்க தவறினர்.

பாரதி அணியினர் ஒரு பந்தினை மட்டும் கோலாக்கத் தவறினர். இதன் மூலம் முத்தையன்கட்டு பாரதி அணியினர் சம்பியனாகி கிண்ணத்தை சுவீகரித்தனர். இவர்களிற்கான வெற்றிக் கிண்ணத்தினை அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் வழங்கிக் கௌரவித்தார். (க-302)

## நேதாஜி வி.கழகம் முதலாம் இடம்

வல்வை விளையாட்டுக்கழகம் நடத்தும் 57 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு விளையாட்டு விழா 2017 இன் நடந்து முடிந்த பெரு விளையாட்டுக்களின் புள்ளிகள் அடிப்படை யில் நேதாஜி விளையாட்டுக் கழகம் 50 புள்ளிகள் பெற்று முதலிடத்திலும் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் 45 புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்திலும் ரேவடி விளையாட்டுக் கழகம் 40 புள்ளிகளுடன் 3 ஆம் இடத்திலுமுள்ளது. (கு)

## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் வல்வை விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமராட்சி லீக்கும் இணைந்ததான கழகங்களுக்கிடையிலான 7 நபர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் சென் சேவியர் B அணியை எதிர்த்து சுடர் ஒளி அணியும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் உடுப்பிட்டி யுத் அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் B அணி மோதவுள்ளது.(கு)

## Northern Challengers இறுதிப் போட்டி இன்று

பருத்தித்துறை லீக்கின் ஆதரவுடன் வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் நடத்தும் Northern Challengers உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று சனிக்கிழமை இரவு 8 மணிக்கு மின்னொளியில் நடைபெறவுள்ளது.

இறுதிப்போட்டியில் இளவாலை யங்கென்றிஸ் மற்றும் மயிலங்காடு ஞானமுருகன் ஆகிய அணிகள் போட்டியிடவுள்ளன. நுழைவுக் கட்டணமாக 100 ரூபா அறவிடப்படுவதோடு இப் போட்டியினை பார்வையிட பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (கு)

## ஜெகன் ஹெற்றிக் கோல்; இறுதிப் போட்டியில் ஞானமுருகன்

வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான Northern Challengers உதைபந் தாட்ட போட்டியில் 01-03-2017 அன்று நடைபெற்ற இரண்டாவது மின்னொளியிலான அரை இறுதி ஆட்டத்தில் மன்னார் ஜோசப் வாஸ் ஐக்கியம்அணியை எதிர்த்து ஞான முருகன் அணி மோதிக் கொண்டது.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

முதலாவது பாதியாட்டத்தின் 2 ஆவது நிமிடத்தில் ஜெகன் கோல் போட்டு அசத்த, ஆட்டத்தின் 14 நிமிடத்தில்கிடைத்த நேர்உதை வாய்ப்பை சுபாஷ் அற்புதமாக கோலாக் கினார். ஆட்டத் தின் 26 ஆவது நிமிடத்தில் கிடைத்த மூலை உதையினை தவரூபன் நேரடியாக கோல் கம்பத்தினுள் உதைத்து கோலாக்கினார். முதல் பாதியாட்டம் 3:0என்ற கோல் அடிப்படையில் ஞானமுருகன் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தின் 36 ஆவது நிமிடத்தில் தீபன் கோல் போட்டு அணியின் கோல் கணக்கினை அதிகரித்தார். ஆட்டத்தின் 42,53 ஆவது நிமிடங்களில் ஜெகன் இரண்டு கோல்களைப்போட்டு தனது ஹெற்றிக் கோலினை பதிவு செய்தார்.



இறுதி ஆட்ட நேர முடிவில் 6:0 என்ற ரீதியில் வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது மயிலங்காடு ஞானமுருகன் அணி. (க)

## சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டி; பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி வெற்றி



யாழ். இந்துக் கல்லூரியுடனான சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டியில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி வெற்றியீட்டியது.

இந்த சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டி பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

போட்டியின் ஆரம்பம் முதலே திறமையாக விளையாடிய பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவர்கள், முதற் சுற்றை 4:0 என்ற கோல் கணக்கில் கைப்பற்றினர். இரண்டாம் பாதியில் அவர்கள் மேலும் இரண்டு கோல்களை போட்டனர்.

எனினும் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களால் கோல் போட முடியாமற் போனது.

அதன் பிரகாரம் 6:0 என்ற கோல்கள் கணக்கில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, இந்த சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டியது. (க)

## வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட 17 வயது பிரிவு பெண்களுக்கான கபடி

## சென். தோமஸ் சம்பியன்



17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டியில் பருத்தித்துறை சென். தோமஸ் அணி சம்பியன் பட்டம் வென்றது.

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியினை எதிர்த்து பருத்தித்துறை சென்.தோமஸ் அணி மோதியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் 41: 17 என்றபுள்ளிகளின் அடிப்படையில் பருத்தித்துறை சென்.தோமஸ் பெண்கள் அணி சம்பியன் பட்டம் வென்றது. (கு)

# நல்லிணக்கம்...

இலங்கை தொடர்பான ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை ஜெனிவாவில் நேற்று வெளியாகியுள்ளது.

2015ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பது பற்றி விளக்கும் வகையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

17 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையில் இலங்கைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு,

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் முழு அளவிலான பணியகம் ஒன்றை அமைப்பதற்கு ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பரிந்துரைத்துள்ளார்.

இந்தப் பணியகத்தை அமைப்பதற்கு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துக்கு இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுக்க வேண்டும். இலங்கை இராணுவம் ஆக்கிரமித்துள்ள அனைத்து தனியார் நிலங்களையும் முன்னுரிமை அடிப்படையில், மீளக்கையளிக்க வேண்டும்.

வர்த்தக மற்றும் பொதுமக்கள் விவகாரங்களில் இராணுவத்தின் தலையீடுகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வு செயலணியின் பரிந்துரைகளைத் தழுவி, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய, நிலைமாறு கால நீதி தொடர்பாக கடப்பாடுகளை கால வரம்புடன் நிறைவேற்றுவதற்காக விரிவான ஒரு மூலோபாயத்தை வகுக்க வேண்டும்.

அதில் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பேரவைக்குச் சமர்ப்பித்துள்ள முன்னைய அறிக்கைகள் மற்றும் தற்போதைய அறிக்கையின் பரிந்துரைகள் உள்ளடக்கப்பட வேண்டும்.

இந்த மூலோபாயத்தின் ஒரு பகுதியாக அல்லது தனியாக ஐ.நா மனித உரிமைகள் பொறிமுறைகளின் முக்கியமான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் தெளிவான திட்டம் ஒன்று தயாரிக்க வேண்டும்.

நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகளை வடிவமைக்கும் செயல்முறை, விடயத்தில் பொதுமக்கள், பாதிக்கப்பட்டவர்களின் குழுக்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் ஏனைய பங்காளர்களுடன் தொடர்ந்தும் இணைந்து செயற்பட வேண்டும்.

உண்மை, நீதி, இழப்பீடுகள் மற்றும் மீள நிகழாமையை உறுதிப்படுத்தும், சிறப்பு அறிக்கையாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு, இந்தச்செயல்முறையில் அவருடன் தொடர்ந்து இணைந்து செயற்பட வேண்டும்.

சம்பந்தப்பட்ட சட்டவரைவுகளுக்கான ஆலோசனை பெறுவதற்கு சம்பந்தப்பட்ட, ஐ.நா பொதுச்செயலரின் சிறப்பு பிரதிநிதிகளை இலங்கைக்கு அழைக்க வேண்டும்.

சித்திரவதை, பாலியல் வன்முறைகள் ஏனைய மனித உரிமை மீறல்கள் தடை செய்யப்பட்டுள்ளன, அவை குறித்து விசாரிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்படும்,

மனித உரிமை பாதுகாப்பாளர்கள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் மீதான எல்லா வகையான கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தல்களையும், பாதுகாப்பு தரப்பினர் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று இராணுவம், புலனாய்வுப் பிரிவு, பொலிஸாருக்கு தெளிவான உத்தரவுகள் பகிரங்கமாக விடுக்கப்பட வேண்டும்.

முழு அளவிலான ஆய்வு செயல்முறையை உருவாக்கி , மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய பாதுகாப்புப் படையினர் மற்றும் சிவில் அதிகாரிகளை பணியில் இருந்து நீக்க வேண்டும். பொறுப்புக்கூறலை வலுப்படுத்த, பாதுகாப்புத் துறையில் ஏனைய மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்த வேண்டும். ஐ.நா அமைதிப்படை நடவடிக்கைகளில பங்கேற்க விண்ணப்பிக்கும் படைப்பிரிவுகள் மற்றும் தனிநபர்கள் கடுமையான கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

2016 ஏப்ரல் மே மாத காலப்பகுதியில் இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தின் பின்னர், சுதந்திரமான நீதிபதிகள் மற்றும் சட்டவாளர்கள் குறித்த சிறப்பு அறிக்கையாளர் சமர்ப்பித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். அனைத்துலக தர நியமங்களுக்கு ஏற்ப பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பாதுகாப்புச் சட்டம் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

ஜெனிவா பிரகடனங்கள் மற்றும் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் குறித்த றோம் பிரகடனம் ஆகியவற்றில் இணைந்து கொள்ள வேண்டும்.

குறிப்பிட்ட கட்டளை அல்லது பொறுப்பான உயர்நிலையினர் எந்த தடைகளும் இல்லாமல் பொறுப்புக் கூறத்தக்க வகையில், போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை மற்றும் காணாமலாக்கப்படுவது தொடர்பான சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

அனைத்துலக மனித உரிமைச் சட்ட மற்றும் அனைத்துலக மனிதாபிமானச் சட்ட மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரிப்பதற்கு, அனைத்துலக நீதிபதிகள், சட்டவாளர்கள், வழக்குத்தொடுனர்கள், விசாரணையாளர்களை உள்ளடக்கிய, கலப்பு நீதிமன்றத்தை உருவாக்கும் சட்டத்தை கொண்டு வர வேண்டும். அதன் பொறுப்பை திறம்பட செயற்படுத்துவதற்குத் தேவையான வளங்களை வழங்க வேண்டும். அனைத்துலக நடைமுறைகளைப் பின்பற்றும் வகையில் பயங்கரவாத தடைச்சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரின் வழக்குகளும்மீளாய்வு செய்யப்பட்டு, அவர்களை விடுவிக்க வேண்டும் அல்லது உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

சித்திரவதைகள் மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பாக சரியான விசாரணைகளை நடத்துவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

போதிய வளங்கள் மற்றும் ஆணையை முன்னெடுப்பதற்கான தொழில்நுட்பங்களுடன் கூடிய உண்மை கண்டறியும் பொறிமுறை ஒன்றை வடிவமைத்து, உருவாக்கி, நடைமுறைப்படுத்த வேண்டும்.

பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவியல் ஆதரவை வலுப்படுத்தும் வகையில், தேசிய இழப்பீட்டுக் கொள்கை ஒன்றை இலங்கை அரசாங்கம் விருத்தி செய்ய வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (11,4)

# கூட்டமைப்பு...

அல் ஹுசைனின் இலங்கை தொடர்பான அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது. இந்த நிலையில் அந்த அறிக்கை தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வெளியிட்ட அறிவிப்பில் இதனை கூறியுள்ளது.

அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பாக ஓரளவு முன்னேற்றம் உள்ளதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் பல்வேறு பாரதூரமான பிரச்சினைகள் குறித்து அரசாங்கம் உரிய நடவடிக்கைகள் எடுக்க தவறியமை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை காணி விடுவிப்பு அரசியல் கைதிகளின் விடுதலை பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குதல் பாதிக்கப்பட்டவர்களிற்கான மேம்பாடு மற்றும் சாட்சிகளை பாதுகாக்கும் தன்மை என்பன குறித்து தமிழத் தேசிய கூட்டமைப்பு ஐக்கிய நாடுகள் சபையிடம் கவலை வெளியிட்டுள்ளது.

இது தவிர சிவில் மற்றும் வர்த்தக நடவடிக்கையில் இராணுவத்தின் தலையீடு என்பன குறித்து திருப்திகரமான செயற்பாட்டை காணமுடியவில்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

தம்மால் தொடர்ச்சியாக தெரிவிக்கப்பட்டு வரும் பிரச்சினைகள் குறித்து அதே போன்ற கருத்தினை ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்திருத்தமையை தாம் வரவேற்பதாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கூறியுள்ளது. (11)

# ஜனாதிபதி இன்று...


லிப்பழை மக்களுக்கு கட்டப்பட்ட வீடுகளையும் கையளிக்கவுள்ளார்.

இந்த நிகழ்வுகள் அனைத்தும் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இன்று காலை பதினொரு மணியளவில் நடைபெறவுள்ளது. ஜனாதிபதியிடம் சொல்லுங்கள் என்றமக்களின் குறைகளைக் கேட்கும் அலுவலகம் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னரே கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தில் இயங்கிய மேற்படி அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட பெரும்பாலான மகஜர்களுக்கு தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

வட பகுதி மக்கள் அந்த அலுவலகத்தில் பணியாற்றும் பிரத்தியேக அதிகாரிகளிடம் சென்று தமிழ்மொழியில் தமது பிரச்சினைகளை நேரில் கையளிக்கலாம் அல்லது மகஜர்களை தொலைபேசி, கைபேசி அல்லது மின்னஞ்சல் ஊடாகவோஅத்துடன் இணையத்தின் மூலமோதொடர்பு கொண்டு பிரச்சினைகளை நேரடியாக ஜனாதிபதிக்கே தெரிவிக்கவும் முடியும். இந்த நடைமுறையை அமெரிக்காவில் ஒபாமாவும் இந்தியாவில் மோடியும் ஏற்கெனவே மக்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளனர்.

அரச சேவைகளை வழங்கும் செயன்முறையினை வலுப்படுத்துவதன் மூலம் பொதுமக்களின் பிரச்சினைகள், குறைகள், ஆலோசனைகள் மற்றும் முன்மொழிவுகளை வினைத்திறனான முறையிலும், இலகுவாகவும் ஜனாதிபதி அவர்களிடம் முன்வைப்பதற்கும், அவற்றிற்குரிய பதில்கள் மற்றும் தீர்வுகளை பயனுறுதியான முறையில் விரைவாகப் பெற்றுக்கொடுப்பதற்கும் தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் இச்செயற்றிட்டத்தின் நோக்கமாகும். இந்த நிலையிலேயே இன்றைய தினம் குறித்த நிகழ்வு ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (4)

# மரண அறிவித்தல்



## அந்தோனிமுத்து அன்ரனிவின்சன் (துரைமணி)

### அருட்தந்தை சில்வெஸ்ரர்தாஸ் (பங்குத்தந்தை, பளை) அவர்களின் தந்தை

செம்பியன்பற்று வடக்கை பிறப்பிடமாகவும், அதே இடத்தையும், பருத்தித்துறை VM வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிமுத்து அன்ரனிவின்சன் (துரைமணி) அவர்கள் நேற்று 03.03.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி அந்தோனிமுத்து மதலேனம் தம்பதிகளின் அன்பு மகனும், திருமதி தேவசகாயம் ஜெபமேரி பற்றிமாவின் (மணி) அன்புக் கணவரும், ஜேம்ஸ் சில்வெஸ்ரர் (இத்தாலி), றோசலின் (இத்தாலி), வில்சன் ஜெறின் (சமுர்த்தி முகாமையாளர்-உடுப்பிட்டி), அருட்தந்தை சில்வெஸ்ரர்தாஸ் (பங்குத்தந்தை-பளை), சில்வெஸ்ரர் ஜெகதாஸ் (பெல்ஜியம்), சில்வெஸ்ரர் ரேனுதாஸ் (லண்டன்), மேரி ஜக்குலின் (பிரான்ஸ்), மேரி செபோஜினி (லண்டன்), ஜெயரோகினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பவுலினப்பு, தார்சியஸ் (கனடா), அமரர் தார்சில்டா ஆகியோரின் அன்புச் சகோதரனும், இளவரசி, நிக்ஷன், ரவிச்சந்திரன், லக்சனா, நந்தன், றொனால்ட் ஆகியோரின் மாமனாரும், விதுஷா, திரிஷா, டிலக்சனா, அபிஷாந், திரிஷாந், ஜெசிக்கா, அர்வினா, றொபிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும், அருட்தந்தை தா.றெஜிக்குமார் அமதி (உப அதிபர்-புனித ஹென்றியரசர் கல்லூரி இளவாலை) அடிகளாரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பருத்தித்துறை VM வீதியில் உள்ள இவரது இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு செம்பியன்பற்று வடக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்படும். பின் திங்கட்கிழமை 06.03.2017 காலை 10.30 மணிக்கு செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் சேமக் காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:-மகன்**

**அருட்தந்தை அ.சில்வெஸ்ரர்தாஸ்**
**(பங்குத்தந்தை-பளை) 0772487600**

(8112)

யாழ்ப்பாண பொதுநூலகம்




**விற்பனைக்கு**

புறோயிலர் சுத்தம் செய்தது 1Kg 400/= அத்துடன் ஊர்ச் சேவல், கல்பேட், பேரன்ஸ், முட்டை என்பன விற்பனைக்குண்டு.

தாசன் பாம் 158/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 076 709 3847 (8108)

**காணி விற்பனைக்கு**

கிளிநொச்சி செல்வாநகரில் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
0774376047, 0774283647 (சி-7720)


# சங்கிலி அறுக்க முயற்சி...

ந்த தங்கச் சங்கிலியை அறுக்க முற்பட்ட போது அவர் தடுத்து நிறுத்தியபோதே கத்தியால் கழுத்தில் குத்தியதாக தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை இரணைமடு குளத்திற்கு சென்றுகொண்டிருந்த குறித்த பெண்ணின் மகன் தாயை கடந்து ஐம்பது மீற்றர் தூரம் சென்ற நிலையில் அவரின் அலறல் சத்தம் கேட்டு திரும்பி பார்த்த போதுதான், சிவில் உடை தரித்த நபர் ஒருவர் அம்மாவை கத்தியால் குத்திவிட்டு இராணுவ முகாம் பக்கம் வேகமாக தப்பிச் சென்றுவிட்டார் எனவும் அவரை எப்போது கண்டாலும் அடையாளம் காட்டுவேன் என்றும் குறித்த பெண்ணின் மகன் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் இடம்பெற்ற பகுதி கிளிநொச்சி படைகளின் தலைமையகம் அமைந்துள்ள இரணைமடு முகாமின் பின்புறம் என்பது குறிப்பிடத்தக்கது. இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (செ-15-281-312)

# கொக்குவில் இந்துக் கல்லூரி கல்லூரிச் சமூகம்

பெற்றோர்கள் / பழைய மாணவர்கள்
அன்புடையீர்,

## அதிபர் நியமனம் தொடர்பான அவசர கலந்துரையாடல்

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி பாடசாலை அதிபர் நியமனம் தொடர்பாக கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல்.

இடம் : பஞ்சலிங்கம் கேட்போர்கூடம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி
காலம் : நாளை (05.03.2017) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 10.00 மணி

குறித்த நேரத்திற்கு தவறாது சமுகமளித்து தங்களது ஒத்துழைப்பினை வழங்கியுதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"தங்களின் ஒத்துழைப்பு தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தினை தீர்மானிக்கும்"

- கல்லூரிச் சமூகம்,
KHC OSA'S, KHC SDC, KHC TRUST

(சி-7721)


**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

af

பிரெஞ்சு வகுப்புக்கள்

யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்

பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்

இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF உலகம் முழுவதும் 1000 கிளைகள்.

(இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது)

பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்.

(யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை)

International Diploma A 1 பரீட்சைக்கட்டணம்

AF இல் படிப்போருக்கு 4000/- ஏனையோருக்கு 10300/- யாழில் எங்கு படித்தாலும் இப்பரீட்சையை எமது AF இல் மட்டுமே எழுத முடியும்.

ஆரம்பம் சில தினங்களில், உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

021 222 8093 61, கச்சேரி- நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

கச்சேரி பஸ் நிலையம் → புகையிரதக் கடவை → AF (வெள்ளை மாடிக் கட்டடம்)

(சி-7717)


# மரண அறிவித்தல்



## திருமதி வேலுப்பிள்ளை செல்வரத்தினம்

பருத்தித்துறை ஓடக்கரையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை செல்வரத்தினம் கடந்த (28.02.2017) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமார் - இராசரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், அமரர் வேலுப்பிள்ளை அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - சின்னாச்சிபிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்றவர்களான ஏரம்பமூர்த்தி, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமேஸ்வரி, செல்வராஜா, இராஜேஸ்வரி, யோகேஸ்வரி (டென்மார்க்), தங்கராஜா (கனடா), யோகராஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற அன்ரனி யோகராஜா மற்றும் சாந்தகுமாரி, சௌந்தர ராஜா, காலஞ்சென்ற அரியரத்தினம் மற்றும் வீணா (கனடா), ஷாமினி (கனடா) ஆகியோரின் மாமியாரும், செல்வகுமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், துணுக்காய்), யாழினி (மக்கள் வங்கி,வல்வெட்டித்துறை), மாதவன் (ஆசிரியர் - கிளி/அக்கராயன் ம.வி), வாமினி, தமிழினி, கோகுலன், லோசியன், மதனிகா, ராகினி, பிறேம் (டென்மார்க்), மீரா (டென்மார்க்), நந்தகுமார் (டென்மார்க்), வர்ஷிகா (கனடா), வர்ணிகா (கனடா), விதுஷனா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (05.03.2017) ஞாயிற்றுக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 9 மணியளவில் பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஓடக்கரை,
பருத்தித்துறை.

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே : 077 108 1232

(8103)


**V2 TRAVELS**

தை மாதம் தங்கம் வென்ற அதிஸ்டசாலி

அதிஸ்ட எண் - N/13JAN17/1371/152

சி.தேவராசா
கரணவாய், கரவெட்டி

சிங்கப்பூர் 1 பவுண்

இவர் 13-01-2017 அன்று எமக்கூடாக 1கிலோ பொதி ஜெர்மனிக்கு அனுப்பினார்

நீங்களும் தங்கம் மற்றும் மோட்டார் சைக்கிள் வெல்ல

வாய்ப்புக்களுக்கு: 0768226240

(சி-7707)

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240
- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**

070 330 5500

அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com

உங்கள் அனைத்து விதமான பொதிகள் மற்றும் கடிதங்களை நம்பிக்கையுடனும், துரிதமாகவும்,குறைந்தளவு கட்டணங்களுடன் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட நாடுங்கள். (சி-7704)

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | மீசாலை | திருகோணமலை | மல்லாவி |
| முல்லைத்தீவு | கிளிநொச்சி | கனகராயன்குளம் | வவுனியா |

**Win Repair**

A/C களும்,
சகலவிதமான குளிர்சாதனப் பெட்டிகளும்
உங்கள் வீடுகளுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

தொடர்பு - 077 9648942

(8107)

**கண்டி மரக்காலை தளபாடம் விற்பனை நிலையம்**

உள்நாட்டு வெளிநாட்டு மரப் பலகை, வீட்டு தளபாடம்,கதவு நிலை, கதவுகள், யன்னல்கள் மிக சிறந்தவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P : 0777405037
0776658193

54 - 60 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(நீதிமன்றுக்கு முன்பாக)

(சி-7716)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.